Follow us:

# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 148 குரோதி வருடம், தை மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை
(15.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 14, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12







சீனாவில் தற்போது தங்கியுள்ள ஜனாதிபதி அநுர தலைமையிலான குழு வீதி அபிவிருத்திச் செயற்பாடுகளில் சீனாவின் பங்களிப்பை கோரியுள்ளதாகத் தகவல்.

இதற்கிடையே சீனாவுக்கு பயணமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி அநுர, சீன அரசினால் வழங்கப்பட்ட பிரத்தியேக விமானத்தில் சென்றமை குறித்து விமர்சனங்கள் எழுந்துள்ளன. வழமையாக நாட்டுத் தலைவர்மார் தமது நாட்டின் விமானங்களில் பயணிப்பது வழக்கம். ஆனால், ஜனாதிபதி அநுர சீனாவால் வழங்கப்பட்ட விமானத்தில் சென்றிருப்பது அந்த நாட்டுக்கு அடிமையாகிவிட்டதைக் காட்டுகிறதா என்று இணையத்தில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## கமெண்ட் கந்தர்...



கிளீன் ஸ்ரீலங்கா என்று மக்கள் கடைசியா ஆட்சியையே கிளீன் பண்ணிப்போடுவாங்களோ தெரியேல்ல.....



## நடைமுறைக்கு வருகிறது டிஜிட்டல் அடையாள அட்டை

டிஜிட்டல் அடையாள அட்டையை அடுத்த மாதத்திலிருந்து வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் புதிதாக வழங்கப்படும் சகல அடையாள அட்டைகளும் டிஜிட்டல் முறையினூடாக வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும் டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

இந்த டிஜிட்டல் முறைக்கான கட்டமைப்பை நிறைவு செய்யும் பணிகள்... » 02 பக்கம்

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு சீனாவில் செங்கம்பள வரவேற்பு



சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் (Xi Jinping) அழைப்பின் பேரில் சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நேற்று (14) சீனாவின்... » 02 பக்கம்

## புதிய மின் கட்டண திருத்தம் வெள்ளியன்று

### 20 -30 சதவீதத்தால் குறைக்க யோசனை



» 02 பக்கம்

# கூட்டுறவுத் தேர்தலில் என்.பி.பி. படுதோல்வி!

## தேசிய மக்கள் சக்திக்கு ஹோமாகமவில் எதிர்ப்பு

நா. தினுஷா

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அமோக வெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தி, 2025 ஹோமாகம கூட்டுறவுத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

அதன்படி, ஹோமாகமவின் 59 கூட்டுறவு சமாசங்களில் தேசிய மக்கள் சக்தியால் 17 சமாசங்களை மட்டுமே வெல்ல முடிந்தது. தேசிய மக்கள் சக்தி ஆட்சி மீதான மக்கள் அதிருப்தி காரணமாக உள்ளூராட்சி நிர்வாகங்களில் தேசிய மக்கள் சக்திக்கு பின்னடைவு ஏற்பட்டுவருவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.




» 02பக்கம்

## 'தமிழனின்' தைப்பொங்கல் விழா



தமிழனின் தைபொங்கல் விழா நேற்று (14) பம்பலப்பிட்டி, சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றது. படப்பிடிப்பு:லலித் பேரேரா




## கொழும்புக்கு வந்த 30 கப்பல்கள் திருப்பி அனுப்பிவைப்பு

### துறைமுக சங்கங்களுக்கு மீண்டும் பேச்சுக்கு அழைப்பு

நா. தினுஷா

கொழும்பு துறைமுகத்தில் நிலவும் இட நெருக்கடி காரணமாக கடந்த இரு வாரங்களில் துறைமுகத்துக்கு வந்த 30 வரையான கப்பல்கள் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

துறைமுகத்துக்குள் நிலவும் இடப்பற்றாக்குறையே இதற்கான... » 02 பக்கம்




» 10 பக்கம்




THE BANKER
BANK OF THE YEAR 2024
SRI LANKA

இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவு ஒத்துழைப்பு வழங்கும் தொழில் முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் முன்னேறும் தைரியமான பெண்களுக்கு இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும் 'ரண்லிய' கடன் திட்டத்தின் ஊடாக

**பல நன்மைகளோடு 100 மில்லியன் ரூபாய் வரையிலான கடன் வசதி.**

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளை அல்லது www.boc.lk இணையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# தாக்குதல் நடத்தியோருக்கு பொலிஸ் ஆதரவா? கிளிநொச்சியில் கொதித்தெழுந்த சிவசேனை

கிளிநொச்சி பொலிஸார் தாக்குதல் நடத்தியவர்களுக்கு ஆதரவாக இருப்பதாக கூறி சிவசேனா அமைப்பினர் ஏற்பாடு செய்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் (13) மாலை இடம்பெற்றது.

கிளிநொச்சியில் அண்மையில் இந்து மதகுரு ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அவரது உருத்திராட்ச மாலை அறுத்தெறியப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதி கோரி கிளிநொச்சி நகர் பிள்ளையார் ஆலய முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது தேங்காய் உடைத்து தங்களின் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சியில் அண்மைக்காலமாக ரவுடிகளின் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகிறது என்றும் அவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில் அசமந்த போக்குடன் காணப்படுகின்றனர் எனவும் தெரிவித்த போராட்டக்காரர்கள்,தாக்கப்பட்டவர் நீதி கோரி பொலிஸ் நிலையம் சென்ற போது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டவருடன் சமரசத்துடன் செல்லுமாறு கோரியுள்ளமை வேதனையான விடயம் எனவும் ஆர்ப்பாட்டத்தல் ஈடுபட்ட மதகுமார்கள் தெரிவித்தனர்.



# ஹோட்டல் முன்பதிவென்ற பெயரில் மோசடி செயற்பாடு

## இத்தாலி பிரஜை கற்பிட்டியில் முறைப்பாடு

*(ரஸீன் ரஸ்மின்)*

சுற்றுலா நிமித்தம் இலங்கைக்கு வருகை தந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஒருவர், கற்பிட்டி பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்காக இணையத்தில் அறை ஒன்றை பதிவு செய்துவிட்டு, அங்கு வந்து பார்த்த போது குறித்த ஹோட்டல் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதாக அவர் கற்பிட்டி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதுபற்றி விசாரித்த போது, அந்த ஹோட்டல் ஐந்து வருடங்களாக மூடிக் கிடப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் இது தனக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ளதாகவும் அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

கற்பிட்டி - தேதாவாடி பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியில் தங்குவதற்காகவே குறித்த சுற்றுலா பயணி இணையத்தில் அறையொன்றை முன் பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தான் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக இந்த சுற்றுலா பயணி கற்பிட்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா அறைகளை முன்பதிவு செய்யும் இணையதளம் மூலம் இந்த ஹோட்டலை தேர்வு செய்துள்ள அவர், 72ஆயிரம் ரூபாவை முன்பணமாக இணையத்தில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்ட போதிலும், அந்த வெளிநாட்டு பிரஜை பணத்தை இணையத்தில் செலுத்தாமல் நேரில் வந்து செலுத்துவதாக கூறியுள்ளார்.

எனினும், குறித்த ஹோட்டலுக்கு வருகை தந்து பார்த்த போது, அந்த ஹோட்டல் கடந்த 5 வருடங்களாக பூட்டியே கிடப்பதாக தகவல் கிடைத்துள்ளது என அவர் மேலும் கூறியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த வெளிநாட்டு பிரஜைக்கு கற்பிட்டி பொலிஸாரின் உதவியால் ஹோட்டல் ஒன்றில் வாடகைக்கு அறையொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 32 ஆண்டுகள் தீவில் தனியாக வாழ்ந்த நபர்!

## வெளியேறிய 3 ஆண்டுகளில் மரணம்

இத்தாலி நாட்டின் தீவு ஒன்றில் 32 ஆண்டுகள் தனியாக வாழ்ந்த நபர் அதைவிட்டு வெளியேற்றப்பட்ட 3 ஆண்டுகளில் மரணமடைந்துள்ளார்.



அந்நாட்டின் மொடான எனும் ஊரைச் சேர்ந்த மௌரோ மொராண்டி (வயது 85) எனும் நபர் சார்டீனியா தீவுகளிலுள்ள புடெள்ளி எனும் தனித்தீவில் சுமார் 32 ஆண்டுகளாக தனியாக வாழ்ந்து வந்தார். கடந்த 1989 ஆம் ஆண்டு ஒட்டுமொத்த சமூகத்திலிருந்தும் தப்பித்து பாலினேசியா தீவுகளுக்கு செல்வதற்காக கட்டுமரப்படகில் அவர் பயணம் மேற்கொண்டபோது விபத்துக்குள்ளாகி புடெள்ளி தீவை அடைந்துள்ளார்.

அன்று முதல் அந்த தீவை பராமரித்துக் கொண்டும் அதன் கடற்கரைகளை தூய்மைப் படுத்திக்கொண்டும் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தீவின் சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியும் அவர் வாழ்ந்து வந்துள்ளார்.

அவரது பணிக்காக அவருக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அவருக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும், அவராகவே தான் வாழ்ந்த வீட்டில் சூரிய மின்சக்தி அமைப்பை உருவாக்கி குளிர்காலங்களில் வீட்டை சூடாக்கி வாழ்ந்துள்ளார்.

இதனால், இவரைப் போலவே தனித்தீவில் வாழ்ந்தாகச் சித்தரிக் கப்பட்ட பிரபல புத்தக கதாபாத்திரமான 'ரொபின்சன் க்ரூஸோ' எனும் செல்லப்பெயராலும் அவர் அழைக்கப்பட்டு வந்தார்.

இந்நிலையில், கடந்த 2021 ஆம் ஆண்டு புடெள்ளி தீவை சுற்றுச்சூழல் கல்விக்கான இடமாக உருமாற்றும் திட்டத்துக்காக லா மடலேனா தேசியப் பூங்காவின் அதிகாரிகளினால் அவர் அந்த தீவிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

அதன் பின்னர் சார்டீனியா தீவுகளின் லா மடலேனா எனும் இடத்தில் ஒரேயோரு அறைக்கொண்ட வீட்டில் தங்கியிருந்தார். கடந்த சில நாள்களாக அவரது உடல்நிலைக் குன்றியதினால் அவர் தனது பூர்வீகமான மொடெனா எனும் ஊரில் சிகிச்சைப் பெற்று வந்தார். இந்நிலையில், கடந்த வார இறுதியில் அவர் இறந்துவிட்டதாக அதிகாரபூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, அந்த தீவிலிருந்து அவர் வெளியேற்றப்பட்ட பின்னர் பல காலமாக அமைதியில் வாழ்ந்த அவருக்கு நகரத்தின் சத்தம் பிடிக்கவில்லை என அவர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# பதில் அமைச்சர்கள் ஐவர் நியமனம்

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளிநாடு சென்ற நிலையில் ஐந்து அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள மூன்று அமைச்சுக்களான டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய 3 அமைச்சுகளுக்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் , துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு என்பவற்றுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். .

அதன்படி, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்னவும் பாதுகாப்பு பதில் அமைச்சராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகரவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் , துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து பதில் அமைச்சராக வைத்தியர் பிரசன்ன குமார குணசேனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# இஸ்ரேலிய வீரர்களுக்கான விசாக்களை நிராகரியுங்கள்

## தேசிய ஷூரா சபை ஜனாதிபதிக்கு கடிதம்

இலங்கைக்கு வந்த இஸ்ரேலியர்களுக்கு எதிராக ஏற்கனவே கூறப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கோரியுள்ள தேசிய ஷூரா சபையானது, இஸ்ரேலிய வீரர்களுக்கான விசா வழங்குதலை இலங்கை நிராகரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு இலங்கையில் இஸ்ரேலிய பிரஜைகள் தொடர்பான அவதானங்களும் சமூக நல்லிணக்கத்திலும் தேசிய பாதுகாப்பிலும் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படும் பாதிப்பும் என்ற தலைப்பில் தேசிய ஷூரா சபையின் பொதுச்செயலாளர் ரஷீத் எம். இம்தியாஸ் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனவரி முதல் இருவாரத்தில் 2156 டெங்கு நோயாளர்கள்

ஜனவரி மாதத்தின் முதல் இரு வாரங்களில் 2156 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இருவார காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் மாத்திரம் மொத்தமாக 949 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த வருடத்தின் இறுதியில் மொத்தமாக 49,877 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் 24 டெங்கு மரணங்களும் நிகழ்ந்துள்ளன.

2024ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 2965 நோயாளர்களும் நவம்பர் மாதத்தில் 3,498 நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் 3,604 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த வருட ஆரம்ப பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 12.9 சதவீத அதிகரிப்பை காண்பிப்பதுடன் கம்பஹா மாவட்டத்தில் 15.5 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

# இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக பேசுவதற்கு தமிழக முதலமைச்சரிடம் சந்தர்ப்பம் கேட்டுள்ளேன்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

*(பு.கஜிந்தன்)*

இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வின்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளேன். வெகு விரைவில் இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பான சந்திப்பு நடைபெறும்.

தமிழக அரசின் அழைப்பின் அயலகத் தமிழர் தின நிகழ்வில் கலந்து கொண்ட போதே தமிழக முதலமைச்சரிடம் இக்கோரிக்கையை விடுத்திருந்தேன். அதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.



## கூட்டுறவுத்...

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டுக்காக கூட்டுறவு சமாசங்களின் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி படுதோல்வியடைந்துள்ளதாக ஹோமாகம பிரேதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கமல் சந்தன தெரிவித்தார்.

ஹோமாகமவிலுள்ள 59 கூட்டுறவு பிரதேசங்களில் 17 பிரதேசங்களை மாத்திரமே தேசிய மக்கள் சக்தி வெற்றி ஈட்டியுள்ளது. தாம் உள்ளிட்ட ஒன்றிணைந்த குழுக்கள் 59 பிரதேசங்களில் 31 பிரதேசங்களை வெற்றிக்கொண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கமல் சந்தனவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே இதனைச் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

2025 இற்கான ஹோமாகம கூட்டுறவு சமாசங்களின் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணியை படுதோல்வியடையச் செய்துள்ளோம். 59 கூட்டுறவு பிரதேசங்களில் 17 பிரதேசங்களை மாத்திரமே தேசிய மக்கள் சக்தி வெற்றிக்கொண்டிருந்தது. ஒன்றிணைந்த குழுவினர் என்ற அடிப்படையில் 31 பிரதேசங்களை வெற்றிக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின்போது தேசிய மக்கள் சக்திக்கு அல்லது மக்கள் விடுதலை முன்னணி வெற்றியடைந்தபோது கூட்டுறவு சமாசங்களையும் தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவோம் என்று கூறியே அவர்கள் முழு நாட்டுக்கும் அறிவித்திருந்தார்கள். ஆனால், இன்று ஹோமாகம தேர்தல் தொகுதியில் கூட்டுறவு சமாசங்களின் தேர்தலில் வெற்றியடைவதற்காக தேசிய மக்கள் சக்திக்கு எதிராக கட்சி பேதமின்றி கூட்டணி அமைத்துள்ளோம். இதனூடாக நாட்டுக்கு முன்னுதாரணத்தை கொடுத்துள்ளோம்.

எனவே, எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள செயற்பாடுகளில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம். ஹோமாகம கூட்டுறவு சமாசங்களின்; தேர்தலின்போது கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்குமாறு பிரசாரம் செய்தார்கள். இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தத் தேர்தலில் நாங்கள் வெற்றியடைந்துள்ளோம். ஹோமாகம பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரின் முகப்புத்தகத்தில், ஹோமாகம கூட்டுறவு சமாசங்கள் ஊழல் நிறைந்தவை என்று பிரசாரம் செய்துள்ளார். இதேபோன்றதொரு பிரசாரத்தையே ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் முன்னெடுத்திருந்தார்கள்.

இலங்கையில் இருக்கும் சிறந்த கூட்டுறவு பல்நோக்கு சமாசங்களில் ஹோமாகம கூட்டுறவு சமாசமும் ஒன்றாகும்.ஹோமாகம கூட்டுறவு சமாசம் அதிக இலாபத்தையும் உழைக்கிறது. தேசிய மக்கள் சக்தி முன்வைத்த சகல குற்றச்சாட்டுக்களையும் தோற்கடித்து தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்க இந்த ஒன்றிணைந்த அமைப்பு ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்துள்ளது. எனவே, ஹோமாகம கூட்டுறவு சமாசங்களின் இந்த வெற்றியை முன்னுதாரணமாக கொண்டு நாட்டின் தலைவர்கள் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## நடைமுறைக்கு ...

இம்மாதத்துடன் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலான செய்தியாளர் சந்திப்பு நேற்று (14) கொழும்பில் இடம்பெற்றது.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதும் அடையாள அட்டையை பெற்றுக்கொடுக்கும் செயற்பாடுகளில் காலதாமதம் நிலவுகிறது. இந்த செயன்முறையினூடாக அதனைக் மட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதேபோன்று டிஜிட்டல் அடையாள அட்டை கட்டமைப்பு தயாரிப்பதற்கு 20 பில்லியன் ரூபா வரையில் செலவு செய்யவேண்டி நேரிடும். அதில் ஒரு பகுதியையாவது இந்திய உதவித் திட்டத்தில் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தேசிய அடையாள அட்டைக்கான உயிரியல் தரவுகளை சேகரிக்கும் நடவடிக்கைகளை இந்திய நிறுவனமொன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் தகவல்கள் அடிப்படையற்றவையாகும்.

இருந்தபோதும் இந்த டிஜிட்டல் கட்டமைப்பை உருவாக்குவதற்கான முதலாவது சந்தர்ப்பத்துக்காக மாத்திரம் இந்திய நிறுவனமொன்றை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதனூடாக மூன்று முறைகளினூடாக அடையாளங்கள் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதாவது, கைவிரல் அடையாளம், முக அடையாளம் மற்றும் கண்ணின் கண்மணி என்பவற்றை அடிப்படையாக கொண்டு இந்த சென்முறைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்த மூன்று முறைகளும் டிஜிட்டலினூடாகவே முன்னெடுக்கப்படும் என்றார்.

## ஜனாதிபதி ...

பீஜிங் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு, சீன பிரதி வெளியுறவு அமைச்சர் சென் சியாடொன் வரவேற்றதோடு சீன இராணுவத்தின் இராணுவ மரியாதையுடன் ஜனாதிபதிக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பயணித்த பாதையின் இருமருங்கும் இரு நாடுகளின் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, தொழில்நுட்பம் மற்றும் விவசாய மேம்பாடு, வறுமை ஒழிப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட பல களப் பயணங்களிலும் பல உயர் மட்ட வணிகக் கூட்டங்களிலும் ஜனாதிபதி பங்கேற்க உள்ளார்.

இந்தப் விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திட திட்டமிடப்பட்டுள்ளன.

வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீன தூதுவர் சீ ஜென்ஹொான்ங், சீனாவுக்கான இலங்கை தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இந்த விஜயத்தில் பங்கேற்றனர்.

## கொழும்புக்கு ...

பிரதான காரணமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கொள்கலன் விடுவிப்பில் நிலவும் நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, சுங்கம் மற்றும் துறைமுகங்கள் தொடர்பான சேவைகள் வழங்கும் சங்கங்களுடன் கலந்துரையாடியிருந்தார். இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இவர்கள் சகலரையும் எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் அமைச்சரவை உபகுழுவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கமைய, கொழும்புத் துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் (13) 459 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 242 கொள்கலன்கள் தொடர்பான பரிசோதனைகள் நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம், சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலீ அருக்கொட தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் சுங்கத்தினால் 500 கொள்கலன்கள் பரிசோதிக்கப்பட்டு விடுவிக்க கூடியதாக இருந்தாலும் விடுவிப்பு அதிகாரிகள் மற்றும் லொறி சாரதிகளின் வருகை குறைவடைந்துள்ளதால் விடுவிக்கப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கை இவ்வாறு குறைந்த மட்டத்தில் பேணப்படுவதாகவும் பொருள் பரிசோதனை பிரிவில் இன்னும் 496 கொள்கலன்கள் மீதமுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கொள்கலகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கொள்கலன் வருகையானது பொதுவாக 12 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவே துறைமுக அதிகாரசபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, துறைமுகத்துக்குள் நிலவும் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் இந்த மாதத்துக்குள் கொள்கலன் வாகனங்களை நிறுத்துவதற்கு வேறு இடங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படும் கொள்கலன் வாகனங்களை நிறுத்த பேலியகொடவில் தனியான இடமொன்றை வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்துக்கு சொந்தமான மேலும் இரு காணிகள் புளுமெண்டல் பிரதேசத்தில் இருக்கின்றன. அவற்றையும் இதற்காக பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான முழு திட்டம் உரிய காலத்தில் முன்னெடுக்கப்படாமையின் காரணமாகவே துறைமுகத்துக்கு வரும் கப்பல்களை மீள திருப்பி அனுப்பி வைக்க நேர்ந்துள்ளது. கொழும்பு துறைமுகத்தை பொறுத்தவரை உரிய நேர்த்தில் உரிய நடவடிக்கை எடுக்காமையே தற்போது பிரச்சினையாக மாறியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், "கடந்த இருவாரங்களில் கொழும்பு துறைமுகத்துக்கு வந்த 30 வரையான கப்பல்கள் மீளத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. துறைமுக அபிவிருத்தி பணிகள் முறையாக இடம்பெற்றிருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய மின் ...

மின்கட்டண திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (17) வெளியிடப்படவுள்ளது.

2025 ஜனவரி மாதம் முதல் எதிர்வரும் ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு தற்போது நடைமுறையிலுள்ள மின் கட்டண நடைமுறையை அவ்வாறே முன்னெடுத்துச் செல்ல மின்சார சபை யோசனை முன்வைத்துள்ளது. இந்த யோசனை தொடர்பில் கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் மக்கள் கருத்துக் கணிப்புகளை முன்னெடுக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

அந்தக் கருத்துக் கணிப்புகள் கடந்த 10 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. இதன்போது மின் கட்டணத்தை 20 – 30 சதவீதத்தால் குறைக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த கருத்துக் கணிப்பில், மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட மின் கட்டண திருத்த யோசனை மற்றும் அதுதொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஊழியர்களினால் மேற்கொள்ளப் பட்ட மதிப்பாய்வின் பின்னர் தயாரிக்கப்பட்ட யோசனை வரைவு தொடர்பில் பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கமைய, மின் கட்டணத்தை குறைப்பதா அல்லது தற்போது நடைமுறையிலுள்ள கட்டண முறையை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதா என்பது தொடர்பான தீர்மானத்தை நாளை மறுதினம் அறிவிக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் தை மாதம்**
**02ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** எதையும் துணிவுடன் செய்ய மாட்டீர்கள். மற்றவர்களை நம்பு வதற்கு முன்னர் இரண்டு தடவை யோசியுங்கள்.

**ரிஷபம்** நினைத்த காரியத்தில் வெற்றிவாகை சூடுவீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த மங்கள காரியங்கள் இன்று நடைபெறும்.

**மிதுனம்** பணம், பொருள் நட்டம் ஏற்படும் நாள். வீண் வாக்குவாதங்களால் வீண் தொல்லைகள். கோபத்தை அடக்கிக் கொள்க.

**கடகம்** மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். தேவையற்ற பயணங்களைக் குறைத்துக் கொள்க.

**சிம்மம்** செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுங்கள்.தேவையற்ற பயணங்களால் தொல்லை உண்டு.

**கன்னி** நீங்கள் எதிர்பார்த்த உதவிகள் உங்கள் நண்பர் மூலம் கிடைக்கும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும்.

**துலாம்** முயற்சித்த தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்குவீர்கள்.

**விருச்சிகம்** தந்தையின் உடல் நிலையில் கவனம் வேண்டும்.பொறுமையோடு அனைத்தையும் கையாளுங்கள். கிட்டிய ஒருவரை இழக்க நேரிடும்.

**தனுசு** பயணங்களைக் குறைத்துக்கொள்வது நல்லது. திடீர் கோபத்தால் மனதில் அமைதி இருக்காது. வீண் டென்ஷன் வேண்டாம்.

**மகரம்** தொழில்,வியாபார விடயத்தில் கவனம் வேண்டும். வீணாக மனதைப்போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். பொறுமை அவசியம்.

**கும்பம்** பண வருவாய் திருப்திகரமாக அமையும். உடல் நோய்கள் தீரும். சோம்பலைத் தவிர்த்து முயற்சி செய்யுங்கள்.

**மீனம்** வீணான மனக் கவலை வேண்டாம். எதிர்காலத் திட்டங்களை நல்ல முறையில் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யுங்கள்.

**திதி:**துவிதியை பி.இ.3.23 வரை பின் திருதியை
**நட்சத்திரம்:** பூசம் மு.ப.10.28 வரை பின் ஆயிலியம்
**பிறை:**தேய்பிறை
**யோகம்:**அமிர்த யோகம் மு.ப.10.28 வரை பின் மரண யோகம்
**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.
**நல்ல நேரம்:**காலை 6.26 – 7.56 மணி வரை காலை 9.26 – 10.26 மணி வரை பகல் 1.56 – 3.26 மணி வரை மாலை 4.26 – 5.26 மணி வரை
**ராகு காலம்:**12.26 – 1.56 மணி வரை
**எமகண்டம் :**7.56 – 9.26 மணி வரை
**குளிகை :**10.26 – 12.26 மணி வரை
**சந்திராஷ்டமம்:**தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 10.28 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முற்பகல் 10.28 மணிக்கு மேல்**
அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்:**மாட்டுப் பொங்கல்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# அமெரிக்கா அழைத்தால் நேரடியாகவே எமது பிரச்சினைகளை எடுத்துக்கூறுவோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் உருக்கம்




(வவுனியா நிருபர் )

அமெரிக்க நிர்வாகம் எங்களை அழைத்தால் வொஷிங்டனுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராகவுள்ளோம்''- என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வவுனியாவில் பிரதான தபாலகத்துக்கருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பொங்கல் நாளான நேற்று செவ்வாய்க்கிழமை (14) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இப்போராட்டத்தின் பின் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார்,

''இன்று தைப்பொங்கல். இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நாள். விவசாயத்துக்கு இன்றியமையாத சூரிய ஒளியை வழங்கிய சூரியனுக்கு (சூரியக் கடவுள்) நமது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக இந்த நாள் தைப் பொங்கல் 2025ஐ நாங்கள் நம்பிக்கையுடன் கொண்டாடுகிறோம்,ட்ரம்பை வாழ்த்துகிறோம். நீதி மற்றும் இறையாண்மைக்கான தமிழர் போராட்டங்களை பெருக்குகிறோம்.

அறுவடையில் முக்கிய பங்காற்றிய மழை, கால்நடைகள் மற்றும் பூமிக்கு விவசாயிகள் நன்றி தெரிவிக்கின்றனர்.

இந்த இனிய தருணத்தில் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகளை தாய்மார்கள் தெரிவித்துக்கொள்கிறார்கள். தமிழர்களுக்கு இந்த மகத்தான நாளில் 2025 ஆங்கில புத்தாண்டையும் வரவேற்கிறோம்.

எவ்வாறாயினும், இந்த நாள் ஒரு சோகமான மைல்கல்லையும் குறிக்கிறது. தமிழ் தாய்மார்கள் தங்கள் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளை மீண்டும் பெறும்வரையான இடைவிடாத போராட்டத்தின் 2886 ஆம் நாள் தொடர்கிறது.

வவுனியா நீதிமன்றத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் நிற்கும் இந்தத் தைரியமான தாய்மார்கள் சத்தியம் மற்றும் நீதிக்கான கோரிக்கையை தொடர்ந்தும் முன்வைக்கின்றனர்.

தங்களின் அன்புக்குரியவர்களை வெளிக்கொணர்வதும் எதிர்கால இனப்படுகொலைகளைத் தடுப்பதும் தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஆதரவைப் பெறுவதும் தாய்மாரின் நோக்கமாகும்.

நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்ற அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப்பை வாழ்த்துகிறோம். 'அவன் இல்லாமல் ஓர் அணுவும் அசையாது' என்பது பழைய தமிழ் பழமொழி.

அதேபோல், அமெரிக்கா மற்றும் அதன் ஜனாதிபதியின் தலைமை இல்லாமல் உலகம் அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ நகர முடியாது.

மக்கள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, சுதந்திர உலகின் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அவரது வரவிருக்கும் காலத்தில் அமெரிக்காவின் தீர்க்கமான நடவடிக்கைகளால் உந்தப்பட்ட வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

உதாரணமாக, பனாமா கால்வாய், கிரீன்லாந்து மற்றும் கனடா தொடர்பான ட்ரம்பின் கடந்தமாத அறிக்கைகள், அவரது கவனம் இலங்கை உட்பட தெற்காசியாவை நோக்கி விரைவில் திரும்பக்கூடுமென்று நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

உலகில் வளர்ந்து வரும் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிரான தனது நிலைப்பாட்டில் அமெரிக்கா தெளிவாக உள்ளது. சீனாவுக்கான ஆதரவு வெளிப்படையாகத் தெரிந்த இடங்களில் அரசியல் அல்லது கட்டமைப்பு மாற்றங்கள் பின்பற்றப்படலாம்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தமிழர்களாகிய நாம் வரவேற்கின்றோம். அவரது நிர்வாகம் எங்களை அழைத்தால், வொஷிங்டனுக்குச் சென்று காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள், அரசியல் கைதிகள் மற்றும் நிலையான, பாதுகாக்கப்பட்ட, சுதந்திரமான, இறையாண்மையுள்ள தமிழர் தாயகத்தின் தேவை குறித்து விவாதித்து முடிவெடுக்கத் தயாராக வுள்ளோம்'' - என்றார்.

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர் போராட்டம்





யாழ்ப்பாணம், தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும் அதனைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளை மீளவும் உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வலியுறுத்தியும் ஞாயிற்றுக்கிழமை (12) ஆரம்பித்த போராட்டம் திங்கட்கிழமையும் (13) தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சிப் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், கட்சிக் கொள்கை பரப்புச் செயலாளர் சட்டத்தரணி ந.காண்டீபன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் எனப் பலரும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.



**நவகமுவ பொலிஸ் பிரிவிலுள்ள கொரோத்தோட்டையில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஐஸ் போதைப்பொருள் 4 கிலோவும் ஹெரோயின் போதைப்பொருள் 792 கிராமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பில் 37 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டார்.**



**நீர்கொழும்பு, ஏத்துக்கால பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது 35 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதவான் நீதிமன்ற உத்தரவால் 7 நாட்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.**

# துப்பாக்கி முனையில் யுவதியை கடத்திச் சென்ற இருவர் கைது

கேகாலை, தெரணியகல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி யுவதியை கடத்திச் சென்றதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (13) கைதுசெய்யப்பட்டதாக தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்திச் செல்லப்பட்ட யுவதியின் தாயார் தெரணியகல பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சந்தேக நபர்கள் கேகாலை, தெஹியோவிட்ட மற்றும் கதன்கம ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 17 மற்றும் 19 வயதுகளையுடையவர்கள் ஆவர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடத்திச் செல்லப்பட்ட யுவதி கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவருடன் நீண்ட காலமாக காதல் உறவில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இதனை அறிந்துகொண்ட தாயார், யுவதியை சில நாட்களுக்கு உறவினர் வீட்டில் தங்க வைத்துள்ளார்.

பின்னர் இந்த யுவதி கடந்த 12 ஆம் திகதி தனது வீட்டுக்கு மீண்டும் சென்றிருந்தபோது சந்தேக நபர்கள் இருவரும் யுவதியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி யுவதியை கடத்திச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து, கடத்திச் செல்லப்பட்ட யுவதியின் தாயார் இது தொடர்பில் தெரணியகல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெரணியகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





**துங்கல்பிட்டிய பொலிஸ் பிரிவில் செத்தப்பாடு பகுதியில் 101 கிலோ மஞ்சள் மூடைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. இவை சட்டவிரோதமாக கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டவையென பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஜனவரி 15ஆம் திகதி புதன்கிழமை

# உஷாரடைவாரா சஜித்?

“ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவப் பண்புகளை மாற்றிக்கொண்டு, அவரிடமுள்ள குறைபாடுகளை நிவர்த்தித்துக்கொண்டு உடனடியாக கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்காவிட்டால், தற்போது கட்சியிலுள்ள சகலரும் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய நேரிடும்” என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்ட அவர், இதுதொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைய வேண்டும் என்ற நிலைப்பாடு இருக்கிறது. இந்த யோசனையை ஒருசிலர் விரும்புகிறார்கள். இன்னும் சிலருக்கு அதில் விருப்பம் இல்லை. இதுதொடர்பில் சஜித் பிரேமதாச தீர்மானம் எடுக்க வேண்டும். கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கட்சியை மறுசீரமைத்து, அவரிடமுள்ள ஒருசில குறைபாடுகளை நிவர்த்தி செய்து பயணிக்காவிட்டால் ஐக்கிய மக்கள் சக்தியிலிருக்கும் அநேகமானவர்கள் சஜித்தை கைவிட்டு ரணில் விக்கிரமசிங்கவிடம் செல்வார்கள். எனக்கு அவ்வாறானதொரு எதிர்பார்ப்பு இல்லை. தொடர்ந்தும் இந்தக் கட்சியில் அங்கத்துவம் வகிக்கவே எதிர்பார்க்கிறேன்.

ஏனென்றால், புதிதாக உருவாக்கப்பட்ட இந்த கட்சிக்குள் எனக்கு இன்னும் பாரிய பொறுப்பு இருக்கிறது. தொலைபேசி சின்னத்துக்கு வாக்களித்த மக்களின் வாக்குகளே எனக்கு கிடைத்துள்ளன. தலைமைத்துவம் தீர்மானித்தால், இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம். இருந்தபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற விடயத்தில் ஒருசிலர் இணக்கத்துடனும் இன்னும் சிலர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கும் நிலைப்பாட்டிலுமே இருக்கிறார்கள்.

எனவே, சஜித் பிரேமதாச தொடர்ந்து கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்காவிட்டால் இறுதியில் கட்சியின் சகல உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிடுவார்கள். சஜித் பிரேமதாசவின் தலைமைத்துவத்துக்கு விருப்பம் தெரிவித்து வந்தவர்களே தற்போது ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருக்கின்றனர்.

அவர் மாற்றமடைந்து, அவரின் தலைமைப் பண்புகளையும் மாற்றிக்கொண்டு , குறைந்தபட்சம் பணி செய்யக்கூடியவர்களை இணைத்துக்கொண்டு இந்தப் பயணத்தை தொடர்ந்தால் , யாருடனும் இணையவேண்டிய அவசியமில்லை. எனவே, அவரே இறுதி தீர்மானத்தை எடுக்க வேண்டும்” என்றார்.

நீண்ட காலம் தொடர்ந்து அதிகாரத்துக்கு - ஆட்சிக்கு - வர முடியாத பிரதான எதிர்க்கட்சியின் தலைவராக இருந்து கொண்டு, கட்சியின் அடுத்த மட்ட மற்றும் கீழ்மட்ட தலைவர்களின் விருப்பு, வெறுப்புகளுக்கு இசைந்து போகாமல் - அல்லது அவற்றைக் கணக்கில் எடுக்காமல் - நடந்து கொண்டால் கட்சி தலைமை நெருக்கடிகளை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். இது சஜித்துக்கு தெரியாத விடயமல்ல.

அதனைத்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக கடந்த 30 ஆண்டுகளாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க 2019 இல் சந்தித்தார். அவரது கட்சி அவருக்கு முன்னாலேயே பிரிந்து, கரைந்து போனது. அவரது கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார்கள். ரணிலைக் கை கழுவி விட்டால் கட்சி உருப்படும் - தேறும் - என்று அவர்களது கட்சியின் தலைவர்கள் மட்டுமல்லாமல், கூட்டணிக் கட்சித் தலைவர்களும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், ஐந்து வருடங்களாகியும் விடயம் ஒப்பேறவில்லை. அக்கட்சியினர் தொடர்ந்தும் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டிய நிலைமை - தலையெழுத்து - நீடிக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தியாக புதிய அவதாரம் எடுத்த போதும் ஆட்சி அதிகாரம் கைக்குக் கிட்டவேயில்லை.

ரணிலின் தலைமையில் கண்ட தோல்வி சஜித்தின் தலைமையிலும் தொடர்வதாகக் கருதும் அவர்கள் அதிலிருந்து மீள்வதற்காக முன்னர் கட்சியை மறுசீரமைக்கும் படி ரணிலுக்குத் தொல்லை கொடுத்தமை போல இப்போது சஜித் பிரேமதாசவுக்கும் தொல்லை கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மற்றும் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பங்காளி கட்சித் தலைவர்கள் முன்வைத்த யோசனைகளை கருத்திற் கொண்டு கட்சியை மறுசீரமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேறு வழியின்றி இப்போது இணங்கியிருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாஷிம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரை உள்ளடக்கிய வகையில் ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்து விடயங்களை முன்னெடுக்கக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சம்மதித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

கட்சி மறுசீரமைப்பு தொடர்பான பரிந்துரைகளை வெகுவிரைவில் முன்வைக்குமாறு இந்தக் குழு பணிக்கப்பட்டுள்ளது. இந்த குழு இந்த வாரமளவில் கூடவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றபோது இந்த விடயங்கள் - கட்சி மறுசீரமைப்புப் பற்றிய விவகாரங்கள் - காரசாரமாக விவாதிக்கப்பட்டிருகின்றன.

ஐக்கிய தேசிய கட்சியை மறுசீரமைப்பதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு தற்காலிக தீர்மானங்களை மாத்திரமே முன்வைத்தார். இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினோம். இங்கும் அந்த தன்மையே காணப்படுமாயின் முன்னேற்றமடைய முடியாது என்று கூட்டத்தில் காரசாரமாகக் கருத்துக் கூறப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

ரணிலுக்குத் தாம் படிப்பித்த பாடத்தை இப்போது தாம் படிக்க வேண்டிய நிலைக்கு சஜித் தள்ளப்பட்டிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது. ஹிருணிக்காவின் எச்சரிக்கையும் இப்போது வெளியாகியுள்ளதால் உஷாரடையவேண்டும் சஜித்.

# ஏகாதிபத்திய அச்சுறுத்தல்!

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்புக்கும் சர்ச்சை பேச்சுக்கும் ஏகப்பொருத்தம் என்பது அனைவரும் அறிந்ததுதான். ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு, வரும் 20-ஆம் திகதி பதவியேற்கவுள்ள நிலையில் கிரீன்லாந்து, கனடா குறித்து அவர் தெரிவித்திருக்கும் கருத்துகள் மீண்டும் சர்ச்சைக்கு வித்திட்டுள்ளன.



கிரீன்லாந்து தீவு, பனாமா கால்வாய் ஆகியவற்றை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்; அது அமெரிக்காவின் நலனுக்கு மிகவும் முக்கியமானது என ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் ட்ரம்ப் தெரிவித்தார். அண்மையில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பிறகும்கூட, தான் முன்பு கூறியபடி இராணுவத்தை அனுப்பி கிரீன்லாந்தையும் பனாமா கால்வாயையும் கைப்பற்றப் போவதில்லை என்று உறுதியளிக்க மறுத்துவிட்டார். அந்தப் பகுதிகளை அமெரிக்கா இராணுவ ரீதியாக கைப்பற்றுவதற்கான வாய்ப்பு இருக்கிறதோ என்கிற கேள்வி எழுந்திருக்கிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் டென்மார்க்குக்கு சொந்தமானதாக இருந்தது கிரீன்லாந்து. 1979-ஆம் ஆண்டு கிரீன்லாந்து தீவுக்கு சுயாட்சி வழங்கப்பட்டது. இதன் 80 சதவீத நிலப்பரப்பு பனிக்கட்டியால் மூடப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதியில் சுமார் 57,000 பேர் மட்டுமே வசித்துவருகின்றனர். அட்லாண்டிக் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடல்களுக்கு இடையே அந்தத் தீவு அமைந்துள்ளதால் அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் இந்தத் தீவை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றன.

கிரீன்லாந்து தொடர்பான ட்ரம்ப்பின் கருத்துக்கு, அமெரிக்காவுக்கு நெருக்கமான ஐரோப்பிய ஒன்றியத்திலேயே கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. ஐரோப்பிய பிராந்தியத்தின் இறையாண்மைமிக்க எல்லைகளை வேறு நாடுகள் கைப்பற்றுவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என பிரான்ஸும் எங்களது தீவு தனி நாடு; அது விற்பனைக்கு அல்ல என கிரீன்லாந்தும் அழுத்தமாகத் தெரிவித்திருக்கின்றன.

அடுத்தகட்டமாக, கனடாவைப் பற்றி ட்ரம்ப் சொன்னதுதான் அதிர்ச்சி ரகம். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை ஆளுநர் எனக் குறிப்பிட்ட ட்ரம்ப், ‘ட்ரூடோவின் குடிமக்கள் மிக அதிக வரி செலுத்த வேண்டியுள்ளது. அமெரிக்காவின் 51-ஆவது மாகாணமாக கனடா மாறினால் 60 சதவீதத்துக்கும் அதிகமான வரி குறைப்பு சாத்தியமாகலாம். உலகின் எந்த நாட்டையும்விட இராணுவப் பாதுகாப்பும் வலுவாக இருக்கும்’ எனத் தெரிவித்தார்.

அத்துடன் நிற்கவில்லை ட்ரம்ப், அகதிகள் மற்றும் போதைப் பொருள்கள் அமெரிக்காவுக்கு கடத்தப்படுவதைத் தடுக்கத் தவறுவதால் கனடாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள் அனைத்துக்கும் 25 சதவீத கூடுதல் வரி விதிக்கப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்தார். ட்ரம்ப்பின் இந்தக் கருத்துக்கு கனடாவில் கடும் எதிர்ப்பு எழுந்திருக்கிறது. பிரதமர் ட்ரூடோ, முன்னாள் பிரதமர் ஜீன் கிரெயட்டியன் உள்ளிட்டோர் கனடாவை மாகாணமாக இணைக்கத் திட்டமிடும் ட்ரம்ப்பின் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது எனத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றபோதே, அவருடைய செயற்பாடுகள் எவ்வாறு இருக்கும் என உலக நாடுகள் கூர்மையாக கவனிக்கத் தொடங்கியுள்ளன. இந்தச் சூழலில் எல்லை விரிவாக்கம் குறித்த ட்ரம்ப்பின் கருத்துகள் உண்மையிலேயே தீவிரத்தன்மை வாய்ந்ததா, வழக்கம்போல நகைச்சுவையாகப் பேசுகிறாரா என சர்வதேச அரசியல் நிபுணர்களால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. ஆனால், அவரது பேச்சின் பின்னணியில் இராணுவ ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ அழுத்தம் கொடுக்கும் தொனி தெரிவதை மறுக்க முடியாது.

சீனா, அமெரிக்கா, ரஷ்யா போன்ற உலகின் வலிமையான நாடுகள் சிறிய நாடுகளை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. தாய்வானை தனது நாட்டின் பிராந்தியமாகக் கருதும் சீனா, தாய்வானை சீனாவுடன் இணைக்க இராணுவ நடவடிக்கை எடுக்கக் கூடத் தயங்க மாட்டோம் எனத் தொடர்ந்து மிரட்டி வருகிறது. தென்சீனக் கடல் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு தீவுகளுக்கும் சீனா ஏகபோக உரிமை கொண்டாடி வருகிறது.

உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரீமியா தீபகற்பத்தை 2014-இல் ரஷ்யா இராணுவ நடவடிக்கை மூலம் தனது நாட்டுடன் இணைத்தது. சுமார் 10 ஆண்டுகள் கழித்து அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டமைப்பில் உக்ரைன் இணைவது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற காரணத்தைக் கூறி, உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போர் சுமார் ஓராண்டாக தொடர்ந்து வருகிறது. இந்தப் போரால் உலகம் எதிர்கொள்ளும் சிக்கல்கள் வேறு விஷயம்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்தி, சுதந்திரமான வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் அமைதியை நிலவச் செய்வதற்காக செயலாற்றும் அவுஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ள ‘க்வாட்’ கூட்டமைப்பு செயற்பட்டு வருகிறது. இந்தக் கூட்டமைப்பில் முக்கியமான பங்களிப்பை அளித்து வரும் அமெரிக்கா, சீனாவைப் போலத் தானும் எல்லை விரிவாக்கம் குறித்துப் பேசுவது பெரிய முரண்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து, உக்ரைனுக்கு ஆதரவாக இராணுவ உதவி, நிதியுதவி வழங்கி வரும் அமெரிக்கா, ரஷ்யாவைப் போன்றே அண்டை நாடுகளை தனது நாட்டுடன் இணைப்பது குறித்து சிந்திப்பது நியாயமே இல்லை. அதிலும், அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவிருக்கும் ட்ரம்ப் இவ்வாறு பேசுவதால் உலகளாவிய அளவில் குழப்பம்தான் ஏற்படுமே தவிர, வேறு எந்த நன்மையும் விளையப்போவதில்லை. அண்டை நாடாக இருந்தாலும் எந்த நாடாக இருந்தாலும் ஒவ்வொரு நாட்டின் இறையாண்மைக்கும் எல்லா நாடுகளும் மதிப்பளிக்க வேண்டியது அவசியம்.

நன்றி - தினமணி











தமிழர் திருநாளான தைப்பொங்கல் தினமான நேற்று அச்சுவேலி புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட திருப்பலி பூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. ஆலய பங்கு மக்களினால் பொங்கல் பொங்கி சூரியனுக்கு நன்றி செலுத்தப்பட்டது. ஆலய பங்குத்தந்தை அடிகளார் மைக்கேல் சௌந்தரநாயகம் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தைப்பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

## இன்றைய நாளில்...


* 1799 – இலங்கைக்குள் அடிமைகள் கொண்டுவரப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டது.
* 1822 – கொழும்பு, களனி ஆற்றுக்குக் குறுக்கே மிதவைப் பாலம் (“படகுகளின் பாலம்”, Bridge of Boats) திறந்து வைக்கப்பட்டது.
* 1889 – கொக்காகோலா கம்பனி அட்லான்டாவில் நிறுவனமயப்படுத்தப்பட்டது.
* 1908 – யாழ்ப்பாணத்தில் காரைதீவு பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
* 1936 – முற்றிலும் கண்ணாடியால் அமைக்கப்பட்ட கட்டடம் அமெரிக்காவில் ஒகைய்யோ மாநிலத்தில் கட்டப்பட்டது.
* 1944 – ஆர்ஜென்ரீனாவில் சான் யுவான் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.
* 1949 – சீன உள்நாட்டுப் போர்: கம்யூனிஸ்டுப் படைகள் தியான்ஜின் நகரை தேசியவாத அரசிடம் இருந்து கைப்பற்றின.
* 1966 – நைஜீரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அபூபக்கர் டஃபாவா பாலேவாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.
* 1969 – சோயூஸ் 5 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் விண்ணுக்கு ஏவியது.

1970 – முவாம்மர் அல்-கடாபி லிபியாவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* 1975 – போர்த்துக்கல் அங்கோலாவுக்கு விடுதலை வழங்கியது.
* 1977 – சுவீடனில் இடம்பெற்ற விமான விபத்தில் 22 பேர் உயிரிழந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

இன்று மாட்டுப்பொங்கல்..... சரியென்றால் இன்றைக்கு தான் பல பேருக்கு பூஜை செய்யோணும்...



# கொழும்பு மாநகர சபைக்கான ரூ. 27 மில்லியன் வரி நிலுவை

## இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு ஆராய்வு




கொழும்பு மாநகர சபையின் கீழ் வாகனத் தரிப்பிடங்களை நிர்வகிக்கும் 26 நிறுவனங்கள், மாநகர சபைக்கு கிட்டத்தட்ட 27 மில்லியன் ரூபா செலுத்தவுள்ளமை தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மாநகர ஆணையாளர் அறிக்கையொன்றைக் கோரியுள்ளதுடன், அறிக்கையில் உள்ள சான்றுகள் மற்றும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை கருத்திற்கொண்டு முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. மோசடி, ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான பிரஜைகள் இயக்கத்தினால் இந்த விடயம் தொடர்பான முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த 26 நிறுவனங்களும் 2023 இல் ஏறத்தாழ 204,164,110 ரூபா மாநகர சபைக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடங்களுக்குச் செலுத்த வேண்டியிருந்தபோதிலும், அந்த நிறுவனங்கள் 2024 இல் மீண்டும் வாகன நிறுத்துமிடங்களின் நிர்வாகத்தைப் பெற்றுள்ளன.

அந்த முறைப்பாட்டில், குறித்த நிறுவனங்கள் 2024 ஏப்ரல் இறுதிக்குள் மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய வரி நிலுவை கிட்டத்தட்ட ரூ. 264,859,471 ஆகும்.

மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படைத் தன்மை இல்லை என தெரிவித்து, சிவில் சமூக குழுவானது, விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தது.



அருந்ததி மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வு கொழும்பு, ஹெவ்லொக் சிட்டியில் அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே. மேகலா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட டவர் அறக்கட்டளையின் பணிப்பாளர் சபை முன்னாள் உறுப்பினர் புரவலர் ஹாஷிம் உமர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன் அனுசரணையாளர்களுக்கு பாராட்டுப் பத்திரங்களையும் வழங்கினார். இதன்போது தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், வீரகேசரி நாளிதழ் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீ கஜன்,சிரேஷ்ட ஊடகவியலாளர் உமாச்சந்திர பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# முந்தலில் சிறுமி தற்கொலை

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்கள எளிய , வீஹேன்கட்டுவ பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (12) சிறுமி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிங்கபுலி ஹேனயலாகே ரஸ்மி லக்ஷிகா ரணவீர (வயது 15) எனும் சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமியின் தாய் தொழில் நிமித்தம் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில், அவரது தந்தை குருநாகலில் வசித்து வருகின்றார்.

சிறுமி தனது அம்மம்மாவின் பராமரிப்பில் வாழ்ந்து வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் இடம்பெற்றபோது, சிறுமியின் அம்மம்மாவும் தாத்தாவும் ஞாயிற்றுக்கிழமை தேவாலயத்துக்கு செல்வதற்காக தயாராகி குறித்த சிறுமியையும் அழைத்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

எனினும் தனக்கு உடல் நிலை சரியில்லை எனத் தெரிவித்துள்ள அந்த சிறுமி, தான் ஓய்வெடுக்க வேண்டும் எனவும் இருவரையும் ஆலயத்துக்கு செல்லுமாறும் கூறியுள்ளார்.

இதனையடுத்து, சிறுமியின் அம்மம்மாவும் தாத்தாவும் ஆலயத்துக்குச் சென்றுவிட்டு, மீண்டும் வீட்டுக்கு வருகை தந்த போது சிறுமி உறங்கும் அறை பூட்டப்பட்டிருப்பதை அவதானித்து அந்த அறையின் கதவை தட்டியுள்ளனர்.

எனினும், குறித்த சிறுமியின் சத்தம் எதுவும் இல்லாததால் அறையின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்த போது, அந்த சிறுமி தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சம்பவம் பற்றி முந்தல் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த முந்தல் பொலிஸார் அங்கு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், புத்தளம் பகுதிக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், மரண விசாரணையை முன்னெடுத்ததுடன் சடலத்தை பிரதே பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

காதல் தொடர்பு அல்லது வேறு ஏதும் காரணங்களால் குறித்த மாணவி தற்கொலை செய்து கொண்டாரா என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழக சிறைவாசிகளுக்கு குறிஞ்சி மகாமாரி அம்மன் நூல் கையளிப்பு





களுத்துறை மாவட்டம், இங்கிரிய, றைகம், மேற்பிரிவில் அமைந்திருக்கும் ஸ்ரீகுறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தின் பெருமையை சொல்லும் வரலாற்று நூல்கள் சென்னை புத்தகக் கண்காட்சியில் கையளிக்கப்பட்டது.

தமிழக அரசினால் சிறைவாசிகளின் சிந்தனையை வளமாக்கி மேம்படுத்தும் நோக்கில் சிறைச்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள நூலகங்களுக்கு புத்தகங்களை வாசகர்களிடமிருந்து சேகரிக்கும் நோக்கில் 48வது சென்னை புத்தகக் காட்சியில் தனி அரங்கு அமைக்கப்பட்டிருந்தது.

இந்த அரங்கில் உள்ள அதிகாரிகளிடம் ஸ்ரீகுறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலய வரலாற்று சிறப்பு நூலின் பிரதிகளை கொழும்பு லயன்ஸ் கிளப் உறுப்பினர் வி.கே.பாலசுப்ரமணியம் மற்றும் புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் சர்வதேச அமைப்பாளர் காஞ்சிபுரம் தியாகராஜன் ஆகியோர் வழங்கினார்கள். இதேவேளை புத்தகக் காட்சியில் அமைக்கப்பட்டிருந்த நம் பதிப்பக அரங்கில் வைத்து, அதன் உரிமையாளரும் பிரபல எழுத்தாளருமான இவள் பாரதியிடம் ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன் குறிஞ்சி மகாமாரி அம்மன் வரலாற்று நூலினை கையளித்தார்.

சிறைவாசிகளுக்கான அரங்கில் கூண்டுக்குள் வானம் எனும் தலைப்பில் சிறைவாசிகளுக்கான புத்தக தானப் பெட்டியும் வைக்கப்பட்டிருந்தது.

வாசகர்கள் தாமாக முன் வந்து அவர்கள் விரும்பிய புத்தகங்களை அந்தப் பெட்டியில் இட்டு புத்தக தானம் வழங்கும்படியாக அமைக்கப்பட்டிருந்தது.

# சீன நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுக

## மனோ கணேசன் எம்.பி ஜனாதிபதி அநுரகுமாரவிடம் கோரிக்கை



சீன நிறுவனங்களிடமிருந்து ஏற்கனவே நிதியுதவி பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுமாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி , ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அநுரகுமார திசாநாயக்க இந்த வாரம் சீனாவுக்கு விஜயம் செய்யும் நிலையில், எதிர்காலத்தில் இலங்கையின் இடைத்தரகர்களுக்கு பணம் செலுத்த வேண்டியதில்லை என்று சீன நிறுவனங்களுக்குத் தெரிவிப்பார் என்ற தகவல்கள் தொடர்பிலேயே மனோ கணேசன் தமது கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஊழலைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதியின் நடவடிக்கையை வரவேற்ற பாராளுமன்ற உறுப்பினர், இடைத்தரகர்களான இலங்கையர்களுக்கு நிதியுதவி வழங்கும் சீன நிறுவனங்களை அவர் இனங்காணவில்லையா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், கடந்த காலத்தில் இத்தகைய நிதியுதவி பெற்ற இடைத்தரகர்களின் பெயர்களை தாமதமின்றி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளியிடுவது முக்கியம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழர் போர்க்கால வாழ்க்கையை ஆவணமாக்கிய டேவிட் காலமானார்






ஈழத்துப் பதிப்புத்துறைக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிய டேவிட் லிகோரி உடல்நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் (ஜனவரி 13) காலமானார்.

யாழ்ப்பாண குடாநாட்டுக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு அச்சுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய 1990களில் மீரா வெளியீடாக 28 வரையான நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

கோடிட்ட அப்பியாசப் புத்தக தாள்களில் அச்சிடப்பட்டு, மர புளொக்கில் பதிக்கப்பட்ட அட்டையுடன் இந்நூல்களை அவர் பதிப்பித்து சைக்கிளில் சென்று விநியோகித்து வந்துள்ளார். போர்க்கால வாழ்வியலைப் பிரதிபலிக்கும் நாவல்களை தனது சொந்தச் செலவில் பதிப்பித்த வகையில் இவரது பணி முக்கியத்துவம் வாய்ந்தது.

செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து.வைத்திலிங்கம்,தாமரைச் செல்வி, கே.எஸ். ஆனந்தன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், கே.ஆர்.டேவிட், இயல்வாணன், பொன். கணேசமூர்த்தி, வளவை வளவன், ஓ.கே.குணநாதன், வாமதேவன், முருகு, இந்திரா பிரியதர்சினி முதலியோரின் சமகால நாவல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

பொருளாதார பலமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் அவர் சமூக அக்கறையுடன் செய்த சேவை முக்கியமானது.




# புத்தளம் மாவட்டத்திலும் பொங்கல் விழா நிகழ்வுகள்



(ரஸீன் ரஸ்மின்)

உலக வாழ் இந்து மக்கள் நேற்று (14) உழவர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடினர்.

அந்த வகையில் புத்தளம் மாவட்டத்தில் வாழும் இந்து மக்களும் தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடினர்.

புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்சுவாமி , உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்ரீதிரௌபதியம்மன் உள்ளிட்ட ஆலயங்களில் நேற்று விசேட பூஜை வழிபாடுகளும் நடை பெற்றன.

தைப்பொங்கல் விசேட பூஜை வழிபாட்டில் பக்தர்கள் கலந்து கொண்டதுடன், தங்களுக்குள் பொங்கல் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

புத்தளத்தில் தைப்பொங்கல் தினமான நேற்று காலை முதல் மழையுடனான சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற போதிலும், மக்கள் தைத் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

# ‘தமிழன்’ தைத்திருநாள் கொண்டாட்டம்–2025





பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயிலில் ‘தமிழன்’ பத்திரிகையினரால் நேற்று தைப்பொங்கல் சிறப்பு விழா நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஆலய நிர்வாக சபையினர், அரசியல் பிரமுகர்கள், லிபர்ட்டி பப்ளிஷர்ஸ் நிறுவன உயரதிகாரிகள், வர்த்தகர்கள், ‘தமிழன்’ ஆசிரியர் பீட உறுப்பினர்கள் மற்றும் பக்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

படப்பிடிப்பு: லலித் பெரேரா, எம்.நசார்

# மறைந்த மௌலவி மஹ்மூத் மறக்க முடியாத ஆளுமை

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அனுதாபம்

புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மௌலவி அப்துல்லாஹ் மஹ்மூத் இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கு அதிக பங்களிப்புச் செய்த மறக்க முடியாத ஆளுமையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா முன்னாள் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் புத்தளம் மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா முன்னாள் தலைவரும் நாடறிந்த மூத்த இஸ்லாமிய சன்மார்க்க அறிஞர்களில் ஒருவருமான ஷெய்க் அப்துல்லா மஹ்மூத் ஆலிம் இவ்வுலகை விட்டுப் பிரிந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன் .

நாட்டில் ஏராளமான உலமாக்களை உருவாக்கிய புத்தளம் காஸிமிய்யா அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சங்கைக்குரிய மர்ஹூம் மஹ்மூத் ஆலிமின் அருமைப் புதல்வர் என்ற வகையில், அன்னார் விட்டுச் சென்ற மகத்தான பணியை முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொட்டுத் தொடர்ந்த மறைந்த அப்துல்லாஹ் மஹ்மூத் ஹஸரத், முக்கியமான ஏனைய விடயங்களைப் போலவே, முஸ்லிம்களின் சமூக, சமயப் பின்னணியுடனான கல்வி மேம்பாட்டிலும் அதிக அக்கறை செலுத்திவந்திருக்கின்றார்.

அவரது மறைவு புத்தளம் மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாது, முழு நாட்டு மக்களுக்கும் பேரிழப்பாகும்.

சமய ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் அவ்வப்போது தலை தூக்கும் பிரச்சினைகளை உரிய முறையில் அணுகி, அனுபவம் வாய்ந்த ஏனைய உலமாக்களையும் அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில், அரசியலில் ஈடுபட்டுவரும் எங்களையும் தொடர்பு கொண்டு உயரிய இஸ்லாத்தின் வழிநின்று அல்-குர்ஆன், அல்-ஹதீஸ் முதலான மூலாதாரங்களை மையப்படுத்தி மஷூராவின் அடிப்படையில் அவற்றுக்கு உகந்த தீர்வுகளைக் காண்பதில் அவர் பெருமளவு பங்களிப்புச் செய்திருக்கின்றார்; இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் நிலவுவதற்கு அவர் அயராது பாடுபட்டிருக்கின்றார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸுல் அஃலா என்ற மேலான சுவன பாக்கியத்தை அருள்வானாக. அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் புத்தளம் மக்களுக்கும் தனிப்பட்ட முறையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமைச்சர்கள் அறையொன்றை பெற்றுக்கொண்ட குழுத் தலைவர்

## பாராளுமன்ற வளாகத்தில் சர்ச்சை



பாராளுமன்றக் குழுத் தலைவரொருவர் தனது சொந்தப் பயன்பாட்டுக்காக அமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஓர் அறையைப் பெற்றதை யடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களிடையே பெரும் விசனம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரமுகர் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அமைச்சர் அறைக்குச் சென்றதாகவும் பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற வளாகத்திலுள்ள அமைச்சர் களுக்கான அறைகள் கடந்த காலத்திலிருந்தே அமைச்சர்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப் பட்டுள்ளன.

சில காலத்துக்கு முன்பு இந்த அதிகாரி பாராளுமன்றத்தில் மற்றொரு உயர் பதவியில் இருந்தபோது, சட்டமா அதிபரொருவர் பாராளுமன்ற வளாகத்தில் ஓர் அமைச்சரின் அறையைக் கோரியபோது மறுத்துவிட்டார் என்று சுட்டிக்காட்டப் படுகிறது. அப்படி அதே பிரமுகர் தற்போது பாராளுமன்றக் குழுவில் நியமிக்கப் பட்டு, இந்த வழியில் அமைச்சருக்கான அறையைப் பெற்றுள் ளார்.

மேற்படி பாராளுமன்ற சிறப்புக் குழுவுக்கு கொழும்பில் வேறு இடத்தில் ஓர் அலுவலகம் உள்ளது. ஆனால், பாராளுமன்ற வளாகத்திலுள்ள உணவு மற்றும் பான வசதிகள் காரணமாக சிலர் அந்த இடத்துக்குச் செல்ல தயங்குகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. இதன் காரணமாக அந்த அலுவலகம் சிறிது காலமாக மூடப்பட்டுள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

பாராளுமன்றில் அமைச்சர்களுக்கான அறையை பெற்றுள்ள நபர் பாராளுமன்ற சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு முன்னைய அரசாங்கத்தில் மேற்கண்ட குழுவில் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். மேலும் இந்தப் பதவிக்காக அவர் மாதத்துக்கு ஆறு இலட்சம் ரூபாக்கு மேல் கொடுப்பனவு மற்றும் வசதிகளைப் பெறுவதாக அறியவருகிறது.

# அம்பியூலன்ஸ் விபத்து: சாரதி மருத்துவமனையில்




(ரஸீன் ரஸ்மின் )

புத்தளம் - வண்ணாத்திவில்லு வீதியில் 10ஆவது மைல்கல் பகுதியில் நேற்றுமுன்தினம் (13) மாலை அம்பியூலன்ஸ் ஒன்று வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

எனினும், குறித்த அம்பியூலன்ஸில் சாரதியைத் தவிர, வேறு எவரும் இருக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

வண்ணாத்திவில்லு பிரதேச வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்பியூலன்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் குறித்த அம்பியூலன்ஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வண்ணாத்திவில்லு பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்ற மருத்துவ சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலையிலிருந்து மருத்துவர் ஒருவரை அழைத்துச் சென்றுவிட்டு, சிகிச்சை முடிந்த பின்னர் அந்த மருத்துவரை மீண்டும் புத்தளம் வைத்தியசாலையில் விட்டுவிட்டு வண்ணாத்திவில்லு நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் வண்ணாத்திவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து நீரில் அள்ளுண்டு ஒருவர் பலி

(அட்டப்பள்ளம் செய்தியாளர்)

நிந்தவூர், அட்டப்பள்ளம் வயல் பகுதியில் உள்ள ஆலயடி துருசிக்கட்டில் மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து வீழ்ந்ததில் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை (13) மாலை நிந்தவூர் ஆலயடிக்கட்டில் உள்ள துருசியில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரே தவறி விழுந்து நீரில் அள்ளுண்டு சென்ற நிலையில் அவரைத்தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

சாய்ந்தமருது ஜனாஸா மக்கள் பேரவையின் களப்பணியாளர்களும் கல்முனை ஆழ்கடல் சுழியோடிகளும் தேடுதல் பணியில் ஈடுபட்டு சடலத்தை மீட்டெடுத்தனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் 18 வயது இளைஞன் கைது

(திகாமடுல்ல செய்தியாளர்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் திங்கட்கிழமை (13) இரவு 09.30 மணியளவில் ஒரு தொகை ஐஸ் போதைப்பொருளுடன் 18 வயதான நபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.

சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கருவாட்டுக்கல் 02 ஆம் பகுதியைச் சேர்ந்த நபரிடமிருந்து ஒரு தொகை ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவுப் பொறுப்பதிகாரி ஏ.நஸார் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் ரபாயிதீன், பொலிஸ் உத்தியோகத்தர் எம்.ஏ.பாரூக் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







*தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று (14) பொங்கல் தின கொண்டாட்ட நிகழ்வொன்று கொழும்பு, பம்பலப்பிட்டி கதிரேசன் வஜிரா பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.*

# தினசரி 2,500 கடவுச்சீட்டுகளை வழங்க அமைச்சு நடவடிக்கை



நாளொன்றுக்கு 2,500 கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகத்துக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் விஜேபால, ''இதற்கு முன்னர் நாளொன்றுக்கு 1,200 கடவுச்சீட்டுகள் மட்டுமே வழங்கப்பட்டன.

மேலும், அவசரமாக வெளிநாடு செல்ல வேண்டியவர்கள் கடவுச்சீட்டுப்பெற தனி கருமபீடம் திறக்கப்பட்டுள்ளது.

அந்தக் கருமபீடத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு விரைவாக கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்'' - என்றார்.

# கசிப்புடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தொடர்பில் விசாரணை



(பாறுக் ஷிஹான்)

வீட்டில் மறைத்துவைத்து கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் கைதான நிலையில் மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை திருவள்ளுவர்புரம் பகுதியில் விற்பனை செய்வதற்காக அதிகளவான கசிப்பு கலன்களுடன் கடந்த திங்கட்கிழமை (13) 45 வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவர் வசமிருந்து 15,000 மில்லி லீற்றர் கசிப்பை சம்மாந்துறை ஊழல் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர். குறித்த சந்தேக நபர் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாக சம்மாந்துறை ஊழல் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரணதுங்க தலைமையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கலாநிதிப்பட்ட பிரச்சினை தொடர்பில் பாராளுமன்ற அதிகாரி விசாரணைக்கு

பாராளுமன்ற வலைத்தளத்தில் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் கலாநிதிப் பட்டம் குறிப்பிடப்பட்டமை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக இன்று புதன்கிழமை (15) ஆஜராகுமாறு குற்றப் புலனாய்வுத்துறை, பாராளுமன்ற சட்டமன்ற சேவைகள் பணிப்பாளர் ஜெயலத் பெரேராவுக்கு அறிவித்துள்ளது.

அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று பாராளுமன்றத்துக்குச் சென்று ஜெயலத் பெரேராவிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்தது.

பாராளுமன்ற வலைத்தளத்தில் உறுப்பினர்களின் பெயர்களைச் சேர்ப்பதற்குப் பொறுப்பான ஆவன அலுவலகம், சட்டமன்ற சேவைகள் இயக்குநரின் கீழ் உள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறை முன்னதாக செயலகத்தின் உதவி இயக்குநரையும் அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் டாக்டர் என்ற பெயரை புகுத்திய அலுவலக ஊழியரையும் அழைத்து விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தது.

இதற்கிடையில், சபைத் தலைவரின் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கடிதத்திலுள்ள தகவல்களின்படி ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் ஒரு முனைவர் பட்டம் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஊழியர்கள் கூறியதாகக் கூறப்படுகிறது. ஆளும் கட்சியின் தலைமை அமைப்பாளர் அலுவலகத்திலிருந்து இந்த ஆவணம் சபைத் தலைவரின் அலுவலகத்தால் பெறப்பட்டதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன்படி, எதிர்காலத்தில் இந்த இரண்டு அலுவலகங்களின் அதிகாரிகளிடமும் இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்கப்படுமென்று குற்றப் புலனாய்வுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

நீதி அமைச்சரும் வழக்கறிஞருமான ஹர்ஷன நாணயக்கார, பாராளுமன்ற இணையதளத்தில் தனது பெயருக்கு முன்னால் மரியாதைக்குரிய டாக்டர் பெயரைக் குறிப்பிடுவது அவமதிப்பு என்று கூறி, குற்றப் புலனாய்வுத் துறையில் சமீபத்தில் முறைப்பாடு செய்திருந்தார். அதன்படி, குற்றப் புலனாய்வுத் துறை இந்த விசாரணையைத் தொடங்கியது.

# வயலுக்குச் சென்று வீடு திரும்பிய குடும்பஸ்தர் விபத்தில் உயிரிழப்பு

## வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் சம்பவம்

(மண்டூர் செய்தியாளர்)

வெல்லாவெளி - அம்பிளாந்துறை பிரதான வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை(12) இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

அன்னமலை, மத்தியமுகாம் பிரதேசத்தைச் சேர்ந்த 43வயதான 04 பிள்ளைகளின் தந்தையான சாமித்தம்பி ஹரிகரன் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து காஞ்சிரங்குடா பிரதேசத்திலுள்ள தனது வயலைப் பார்வையிடச் சென்று பின்னர் தனது வீடு திரும்பும் வழியில் குறித்த பாதையூடாக பயணித்துக்கொண்டிருக்கும்போது அதே திசையில் பயணித்த உழவு இயந்திரம் மோதி விபத்துக்குள்ளாகிய நிலையில், பொலிஸாரினால் மீட்டெடுக்கப்பட்டு களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தை ஏற்படுத்திய உழவு இயந்திர சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைவாக திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு பணித்தார்.

சம்பவம் குறித்த விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரண்டு வயது குழந்தை கிணற்றில் விழுந்து உயிரிழப்பு

## ஏறாவூரில் சம்பவம்

**(ஏறாவூர் செய்தியாளர்)**

ஏறாவூர்ப் பிரதேசத்தில் இரண்டு வயது குழந்தையொன்று கிணற்றில் விழுந்து உயிரிழந்ததாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர், மக்காமடி குறுக்கு வீதியைச் சேர்ந்த சாகித் மெஹறிஸ் அய்னா என்ற குழந்தையே திங்கட்கிழமை(13) பிற்பகல் 02 மணியளவில் இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இக்குழந்தையின் தந்தை கல்முனை பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் பணியாளராகவுள்ளார். குழந்தையின் தாய் குழந்தையை வீட்டில் தனியாக விளையாட விட்டுவிட்டு கடைக்குச்சென்றிருந்தவேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குழந்தை கிணற்றின் அருகிலிருந்த கதிரையொன்றில் ஏறி தவறி கிணற்றில் விழுந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடையிலிருந்து வீடுதிரும்பிய தாய் குழந்தையைத் தேடியுள்ளார். அப்போது கிணற்றின் அருகிலிருந்த கதிரையை அவதானித்ததையடுத்து கிணற்றுக்குள் பார்த்தபோது அக்குழந்தை விளையாடிய பொருள் கிணற்றுக்குள் காணப்பட்டுள்ளது. இதன்பின்னர் அயலவர்களை அழைத்து கிணற்றில் மிதந்துகொண்டிருந்த குழந்தையின் சடலத்தை மீட்டுள்ளார்.

ஏறாவூர் திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த சடலத்தையும்



பார்வையிட்டு மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

# அடைமழைக்கு மத்தியிலும் அம்பாறையில் பொங்கல் வழிபாடு



**(ஆலையடிவேம்பு செய்தியாளர்)**

அம்பாறை மாவட்டத்திலும் உழவர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகை நேற்று (14) அடைமழைக்கு மத்தியிலும் சிறப்பாக நடைபெற்றது.

அதிகாலையில் சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வீடுகளில் பொங்கல் படைத்து வழி பாடுகளில் ஈடுபட்டதுடன் பெரியோர்களின் ஆசியும் பெற்றனர்.

இதேவேளை, அக்கரைப் பற்று ஸ்ரீ வம்மியடிப் பிள்ளையார் ஆலயத்தில் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் விசேட பூஜை வழிபாடுகள் சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றதுடன் பல ஆலயங்களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இதன்போது பெருந் திரளான மக்கள் கலந்துகொண்டு வழி பாடுகளில் ஈடுபட்டனர்.









**சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் உழவர் திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை திருகோணமலை, மூதூர் - மல்லிகைத்தீவு பிரதேச இந்துக்கள் நேற்று வெகு விமர்சையாகக் கொண்டாடினர். அந்தவகையில், தமது வீடுகளில் பொங்கல் பொங்கி பட்டாசு கொளுத்தி உழவர் திருநாளைக் கொண்டாடினர். (மூதூர், கிண்ணியா செய்தியாளர்கள்)**

# ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் பொங்கல் வழிபாடு




**(வீரமுனை செய்தியாளர்)**

சீரற்ற காலநிலைக்கும் மத்தியிலும் உழவர் திருநாளாம் தைத்திருநாள் விசேட வழிபாடுகள் நேற்று(14) மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆலயங்களிலும் வீடுகளிலும் நடைபெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் தைத்திருநாள் விசேட பொங்கல் வழிபாடுகள் நடைபெற்றன.

சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் காலைவேளையில் ஆலய முன்றிலில் பொங்கல் பொங்கி படைக்கப்பட்டு சூரிய பகவானுக்கு விசேட பூஜைகள் ஆலய வண்ணக்கர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பூரண சுதாகரன் குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லாசிவேண்டியும் விவசாயிகள் சிறந்த விளைச்சலைப் பெறவேண்டியும் மாமாங்கேஸ்வரருக்கு பூஜைகளும் செய்யப்பட்டன. இவ்வழியாட்டில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டதுடன் பொங்கல் வாழ்த்துகளையும் பரிமாறிக்கொண்டனர்.


# நற்பிட்டிமுனையில் அடை மழை குளங்களின் நீர் மட்டமும் உயர்வு

**(நற்பிட்டிமுனை செய்தியாளர்)**

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக நற்பிட்டிமுனை பிரதேசத்திலுள்ள ஒட்டன்குளம், மாங்குளம், கல்முனை வெளிக்குளம் போன்றவை நிரம்பி வழியத் தொடங்கியுள்ளன.

கிட்டங்கி, தாம்போதியை அடுத்துள்ள இரு குளங்களும் இந்நிலையிலேயே காணப்படுகின்றன. தொடர்ந்து மழை பெய்தால் கிட்டங்கி தாம்போதியின் நீர்மட்டம் உயரும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

கிட்டங்கி தாம்போதியை அடுத்து செய்கை பண்ணப்பட்டுள்ள தாழ்நில வேளாண்மையும் பாதிப்புறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தைப்பொங்கல் நாளான நேற்றும் மழை பொழிந்தாலும் மக்கள் தமது சமயக் கடமைகளை செவ்வனே செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.






**இந்தியா தமிழ்நாடு, சின்னாளப்பட்டி, திண்டுக்கல் மாவட்ட பசுமை வாசல் பவுண்டேஷன் அமைப்பின் 05ஆம் ஆண்டை முன்னிட்டு சர்வதேச ரீதியில் பல்துறை சாதனையாளர்களுக்காக நடத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற அல்-அர்சத் மகா வித்தியாலய மாணவி மின்மினி மின்ஹாவுக்கு 'இளம் மணிச் செம்மல் விருது-2025' கிடைத்துள்ளது. இதுதொடர்பான நிகழ்வு கடந்த சனிக்கிழமை (11) இடம்பெற்றது. (பாறுக் ஷிஹான்)**




**உழவர்களுக்கு உதவும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் கொண்டாடப்படும் தைப்பொங்கல் விழா நேற்று(14) காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. கடும்மழைக்கு மத்தியிலும் ஆலய பிரதம குரு தலைமையில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளில் பக்தர்கள் கலந்துகொண்டனர். (காரைதீவு செய்தியாளர்)**

# நற்பிட்டிமுனையில் இரத்ததான முகாம்



**(பாறுக் ஷிஹான்)**

'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைந்து நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் சுகாதாரப் பிரிவு நடத்திய இரத்ததான முகாம் ஞாயிற்றுக்கிழமை(12) நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலய ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் வீ.ரீ.கனூன் தலைமையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் மற்றும் சக உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

இவ் இரத்ததான முகாமில் நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் உயர்பீட உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



**சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் உத்தியோகபூர்வ மேலங்கிகளை அமைப்பின் ஆலோசகர்களுக்கு வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(13) இடம்பெற்றது. அமைப்பின் உதவித் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான றபீக் பிர்தௌஸ் தலைமையில் மருதமுனை அல்-மனால் மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது அமைப்பின் ஆலோசகரும் பிறை எவ்.எம் வானொலி சேவையின் பிரதானியுமான பசீர் அப்துல் கையூமுக்கான மேலங்கி வழங்கப்பட்டது. இந்நிகழ்வின்போது சிலோன் ஜேர்னலிஸ்ட் போரத்தின் நிருவாகிகளான செயலாளர் எஸ்.அஷ்ரஃப்கான், உதவித் தலைவர் ஏ.எல்.எம்.சினாஸ், தேசிய அமைப்பாளர் எம்.ஏ.றமீஸ், தவிசாளர் ஏ.எல்.றியாஸ், நிருவாக சபை உறுப்பினர் றாஸிக் நபாயிஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் . (அட்டாளைச்சேனை செய்தியாளர்)**



**ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கான தேசிய மக்கள் சக்தியின் மக்கள் ஒருங்கிணைப்புக் காரியாலயம் அக்கரைப்பற்று 09ஆம் பிரிவில் நேற்று முன்தினம் (13) திறந்து வைக்கப்பட்டது. இதன்போது அம்பாறை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள ரத்நாயக்க, அபூபக்கர் ஆதம்பாவா, பொதுமக்கள் உள்ளிட்ட ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (திருக்கோவில் மேலதிக செய்தியாளர்)**



**கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் சேதமடைந்த வாகனங்களை பார்வையிடுவதற்காக திங்கட்கிழமை(13) களவிஜயமொன்றை மேற்கொண்டார். பல அமைச்சுகளுக்கும் திணைக்களங்களுக்கும் சொந்தமான குறித்த சேதமடைந்துள்ள வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்த உரிய அதிகாரிகளுக்கு இதன்போது அறிவுறுத்தப்பட்டது. (கிண்ணியா செய்தியாளர்)**

# பி.எஸ்.எல். தொடரில் ஒரே அணியில் விளையாடும் வோர்னர், வில்லியம்சன்

பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் விளையாடும் வாய்ப்பை முதல் முறையாக டேவிட் வோர்னர் மற்றும் கேன் வில்லியம்சன் பெற்றுள்ளனர். மேலும் இருவரும் ஒரே அணியில் விளையாடவுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் இந்த ஆண்டு 10ஆவது தடவையாக நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் மே மாதம் 25ஆம் திகதி வரை குறித்த தொடர் நடைபெறவுள்ள நிலையில் தொடரில் விளையாடும் வீரர்களை தெரிவு செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலியாவின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரர் டேவிட் வோர்னர் கராச்சி கிங்ஸ் அணியில் எடுக்கப்பட்டார். மேலும் நியூஸிலாந்தின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் கேன் வில்லியம்சனும் இதே அணியில் எடுக்கப்பட்டார். ஐ.பி.எல். தொடரில் சன்ரைசர்ஸ் அணியில் இருவரும் ஒன்றாக விளையாடிய நிலையில் தற்போது பி.எஸ்.எல். தொடரில் ஒரே அணியில் விளையாடவுள்ளனர்.



# பி.எஸ்.எல். தொடரில் விளையாடவுள்ள இரு இலங்கையர்கள்



10ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் விளையாடும் வாய்ப்பை இலங்கையின் அதிரடி துடுப்பாட்ட வீரரான குசல் பெரேரா மற்றும் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான குசல் மெண்டிஸ் ஆகியோர் பெற்றுள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் இந்த ஆண்டு 10ஆவது தடவையாக நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் மே மாதம் 25ஆம் திகதிவரை குறித்த தொடர் நடைபெறவுள்ள நிலையில் தொடரில் விளையாடும் வீரர்களை தெரிவு செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் இலங்கையின் அதிரடி துடுப்பாட்ட வீரரான குசல் பெரேரா, பாகிஸ்தானின் ஷஹீன் அப்ரிடி தலைமையிலான லாஹூர் கலண்டர்ஸ் அணியில் எடுக்கப்பட்டார். மேலும் இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான குசல் மெண்டிஸ், தென்னாபிரிக்காவின் ரீலி ருஸ்சோவ் தலைமையிலான குயீட்டா க்ளாடியேட்டர்ஸ் அணியில் எடுக்கப்பட்டார். இதேவேளை மேலும் பல இலங்கை வீரர்களில் குறித்த பி.எஸ்.எல். வீரர்கள் வரைவுக்கு பதிவு செய்த நிலையில் இவர்கள் இருவரும் மாத்திரமே தெரிவாகினர்.



# இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையில் மேலுமொரு ஒருநாள் ஆட்டம்

*(அகீல் சிஹாப்)*

சுற்றுலா அவுஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையில் மேலும் ஒரு ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளதாகவும் குறித்த போட்டிகள் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள அவுஸ்திரேலிய அணி மேலதிகமாக ஒருநாள் போட்டி ஒன்றை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபையை கோரியுள்ளது. எதிர்வரும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு தயாராகும் வகையிலேயே அவுஸ்திரேலியா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.



இம்மாத இறுதியில் இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் காலியில் நடைபெறவுள்ளதுடன் ஹம்பாந்தோட்டையில் பெப்ரவரி 13ஆம் திகதி பகலிரவு போட்டியாக ஒரே ஒரு ஒருநாள் போட்டியும் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த சுற்றுப்பயணத்தில் மேலும் ஓர் ஒருநாள் போட்டியை நடத்த ஆஸி. கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இது சாத்தியமானால் அந்த இரு போட்டிகளும் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் பகல் ஆட்டங்களாக நடைபெற வாய்ப்பு இருப்பதாக தெரியவருகிறது.

பாகிஸ்தானில் பெப்ரவரியில் ஆரம்பமாகும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் ஆஸி. அணி துணைக்கண்ட ஆடுகளத்துக்கு தயாராகும் வகையிலேயே இலங்கையில் மேலதிகமாக ஒருநாள் போட்டி ஒன்றில் ஆட திட்டமிடுகிறது.

### பொதுச் செயலாளரின் தடையை தொடர்ந்து

# சர்வதேச ஒலிம்பிக் குழு, ஆசிய ஒலிம்பிக் பேரவைக்கு கடிதம்

தேசிய ஒலிம்பிக் குழு பொதுச் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வாவுக்கு விளையாட்டு அமைச்சர் சுனில் குமாரவினால் கடந்த 10ஆம் திகதி தடைவிதிக்கப்பட்ட நிலையில் 20 தேசிய விளையாட்டு சங்கங்கள் சர்வதேச ஒலிம்பிக் குழு மற்றும் ஆசிய ஒலிம்பிக் பேரவைக்கு கடிதமென்றை அனுப்பியுள்ளன.

இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவில் எழுந்துள்ள தற்போதைய பிரச்சினையில் உடன் தலையிடும்படி அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளன. இலங்கையின் தேசிய ஒலிம்பிக் குழுவில் தற்போது எழுந்துள்ள பிரச்சினையை தீர்த்து அதன் ஜனநாயக செயற்பாட்டை பாதுகாப்பதற்கு அதன் நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு




சட்டரீதியில் தலையிடும்படி அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், விளையாட்டுத் துறை அமைச்சர் தனது பணியை இடைநிறுத்தியது தொடர்பில் சட்டரீதியில் நடவடிக்கை எடுக்க மெக்ஸ்வெல் டி சில்வா திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது. அமைச்சரின் உத்தரவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கு அவர் தயாராகி வருவதாகவும் கூறப்படுகிறது.

மெக்ஸ்வெல் டி சில்வா தனது பணிகளில் ஈடுபடுவது தற்போது தடுக்கப்பட்டிருக்கும் நிலையில் பொதுச் செயலாளர் பதவிக்கான பணிகளில் ஈடுபடுவதற்கு உப செயலாளர் சந்தன லியனகே கடந்த சனிக்கிழமை (11) தொடக்கம் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தற்போதைய நிலை குறித்து தலையிடக் கோரி சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு கடிதம் எழுதியிருக்கும் 20 தேசிய விளையாட்டு சங்கங்களில் இலங்கை உதைபந்து சம்மேளனம், இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம், இலங்கை பூப்பந்து சங்கம், இலங்கை கரப்பந்து சம்மேளனம் ஆகிவையும் அடங்கும்.

தேசிய ஒலிம்பிக் குழுவில் 29 விளையாட்டு சங்கங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன. 2025 மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் தேசிய ஒலிம்பிக் குழுவின் அடுத்த தேர்தலை நடத்துவதற்கு தற்போது தேர்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. எனினும் சட்டரீதியில் தேசிய ஒலிம்பிக் குழுவின் தேர்தலை 2025 நவம்பர் மாதத்துக்கு பின்னரே நடத்த முடியும் என்று தேசிய ஒலிம்பிக் குழுவின் தற்போதைய தலைவர் சுரேஷ் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.






ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குரு ஸ்ரீ சந்திரானந்த குருக்கள் தலைமையில் நேற்றைய தினம் (14) தைப்பொங்கல் விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன. இவ்விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர். (எஸ்.கணேசன்)








கம்பளை குடமாக்க பொதுநல குழுவின் பொங்கல் விழா கம்பளை வீகுலாவத்தை விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (13) நடைபெற்றது . (டி.வசந்த்)



தைத்திருநாளை முன்னிட்டு மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் நேற்று (14) விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பௌத்த சமய மற்றும் கலாசார இராஜாங்க அமைச்சர் கமகெதர திசாநாயக்க மற்றும் பெருமளவிலான பக்தர்களும் கலந்துகொண்டனர். (யடவத்த செய்தியாளர்)

# சிவப்புக்குப் பதிலாக வெள்ளை அரிசியில் சூரிய பொங்கல்




(நானுஓயா நிருபர்)

நாட்டில் தற்போது நாட்டரிசி, வெள்ளைப்பச்சை அரிசி மற்றும் சிவப்பரிசி என்பவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். இதன் காரணமாக நேற்று பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு பொதுமக்கள் சிவப்பரிசிக்குப் பதிலாக வெள்ளைப்பச்சை அரிசியை பொங்கலுக்கு உபயோகித்தனர்.

மேலும் மலையகத்தில் அதிகமான வீடுகளில் நேற்று (14) காலை சூரிய பொங்கல் வைப்பதற்காக வெள்ளை அரிசியையே பயன்படுத்தினர். மேலும் தொடர்ந்து மழையுடனான சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற போதிலும், மக்கள் தைத்திருநாளை கடந்த வருடங்களை விட ஓரளவு மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

குறிப்பாக, பொங்கலுக்கு பயன்படுத்தும் தேங்காய் உள்ளிட்ட சில பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக மக்கள் பல அசௌகரியங்களுக்குள் ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பன்றிகளின் நடமாட்டத்தால் மக்கள் அச்சம்

(மனுர சுதத் செல்லஹேவா)

ஹட்டன் முதியோர் இல்ல வளாகத்திலுள்ள கால்வாயில் பன்றிக்கூட்டம் அலைமோதுகின்றமையால் குறித்த பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் பகல் நேரங்களில் மட்டுமன்றி இரவு நேரங்களிலும் பன்றிகள் உலா வருவதால் அங்கு பாதையூடாகப் பயணிப்பதற்கு மக்கள் அச்சமடைந்து வருகின்றனர்.

இது குறித்து அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.





கொட்டும் மழையிலும் நேற்றைய தினம் (14) சூரியபகவானுக்கு நன்றி செலுத்திய மலையக பெருந்தோட்ட மக்கள். (பொகவந்தலாவ நிருபர் )

## ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி

ரயிலில் மோதுண்டு நேற்று முன்தினம் (13) ஒருவர் உயிரிழந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

தெய்யனேவெல, பதுளை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில் தெய்யனேவெல பகுதியில் அமைந்துள்ள சுரங்கப் பாதைக்கு அருகாமையிலேயே குறித்த நபர் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பதுளை பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





வத்துகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சிங்களப் பாடசாலையில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள், இந்து சமய கிரியைகளின் விளக்கம் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடினர். வத்துகாமம் கல்வி வலய அத்தரகல்ல வித்தியாலயத்தில் நேற்று (14) அதிபர் டி.எம்.பி.ஜி.பி.ரம்பண்டா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இந்து சமய ஆசிரியைகளின் உதவியுடன் இந்து கலாசாரத்தின்படி சிங்கள் ஆசிரியைகளும் மாணவர்களும் ஆடை அணிந்து சமய நிகழ்வுகளில் பங்குப்பற்றினர். (ஜே.எம்.ஹாபீஸ்)

# அநுரகுமார ஆட்சியிலும் சி.ஐ.டிக்கு அழைக்கப்படும் போராட்டக்காரர்கள்


(மன்னார் நகர் நிருபர்)

வடக்கு, கிழக்கில் செயற்பாட்டாளர்கள் மீதான பொலிஸ் அடக்குமுறை புதிய அரசாங்கத்தின் கீழும் தொடர்வதாக போராட்டக்காரர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

20 நாட்களுக்கும் மேலாக முல்லைத்தீவு விமானப்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்யர்களை அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்பவேண்டாமென வலியுறுத்தும் வகையில் முல்லைத்தீவில் போராட்டமொன்றை ஏற்பாடு செய்தமைக்காக அரச சார்பற்ற அமைப்பின் செயற்பாட்டாளர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கடந்த வியாழக்கிழமை (09) நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் மேலதிக தகவல்களை அறிந்துகொள்ளவேண்டியுள்ளதாகவும் அது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருமாறும் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணை ஒருங்கிணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோவுக்கு ஜனவரி 12 ஆம் திகதி விடுக்கப்பட்டுள்ள பொலிஸ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று (15) காலை 9.00 மணியளவில் கொழும்பு - 01 பழைய பொலிஸ் தலைமையகக் கட்டிடத்தில் அமைந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் வர்த்தகக் கடத்தல் விசாரணைப் பிரிவின் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரியை சந்திக்குமாறு அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.


SRI LANKA POLICE
MESSAGE FORM

எனினும், இன்று( 15) தான் விசாரணைக்கு சமுகமளிக்க முடியாத நிலைமையில் இருப்பதாகவும் ஆகவே, பிறிதொரு தினத்தை வழங்குமாறும் ஜாட்சன் பிகிராடோ கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கமைய நாளை மறுதினம் (17)காலை 10 மணிக்கு முன்னிலையாகுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்யாக்களை நாடு கடத்தக் கூடாது எனக் கோரி கடந்த ஜனவரி 09 ஆம் திகதி முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கொழும்பிலிருந்து முல்லைத்தீவு சென்ற பிரபல மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோவும் கலந்துகொண்டார்.

மியன்மாரில் இருந்து தப்பி வந்த ரோஹிங்யர்களை மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பக்கூடாதெனக் கோரி சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் உள்ளிட்டவர்கள் 2025 ஜனவரி 10 வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு ஜனாதிபதி செயலகத்திடம் கடிதமொன்றையும் கையளித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நவ சமசமாஜக் கட்சியுடன் இணைந்த காணாமல் போனோர் தொடர்பில் தேடியறியும் குழு தலைமை தாங்கியது.

## ரயிலின் முன் பாய்ந்து குடும்பஸ்தர் உயிர் மாய்ப்பு மீசாலையில் சம்பவம்

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயிலின் முன் பாய்ந்து இளம் குடும்பஸ்தரொருவர் உயிரை மாய்த்துள்ளார்.

மீசாலை கமநல சேவைகள் திணைக்களத்துக்கு முன்பாகவுள்ள ரயில் பாதையில் நேற்றுமுன்தினம் 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம், வெள்ளாம் போக்கட்டி பகுதியைச் சேர்ந்த 19 வயதான நவரத்தினம் நவாஸ்கரன் என்னும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் மன்னாரில் பொங்கல் கோலாகலம்




(ஜோசப் நயன்)

உலக வாழ் தமிழர்கள் நேற்று செவ்வாய்க் கிழமை (14) தைப்பொங்கல் பண்டிகையை வெகு விமரிசையாகக் கொண்டாடினர். இந்நிலையில், மன்னார் மாவட்டத்திலுள்ள இந்து மற்றும் கத்தோலிக்க மக்கள் தைப்பொங்கல் பண்டிகையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர்.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களில் விசேட தைப் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

மேலும் வர்த்தக நிலையங்கள், நிதி நிறுவனங்கள் உட்பட அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்ட தோடு விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் பஸார் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் பொங்கல் பொங்கி மக்கள் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

## போதை மாத்திரைகளுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் திங்கட்கிழமை (13) காலை போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 24வயதான இரு இளைஞர்களே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இளைஞர்களிடமிருந்து 200 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் தைப்பொங்கல் விசேட பூசைகள்




(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் திருக்கோயில் தைப்பொங்கல் விசேட பூசைகள் ஆலய பிரதம குரு ஸ்ரீமான் பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வர குருக்கள் தலைமையில் நேற்றுக் காலை 8.00 மணியளவில் இடம் பெற்றன.

நேற்று அதிகாலை 5.00 மணியளவில் விசேட ஹோம பூசைகள் இடம்பெற்று 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து வல்லிபுரத்து சக்கரத்து ஆழ்வார் உள்வீதி வலம் வந்து காலை 8.00 மணியளவில் பொங்கல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் கலந்துகொண்டனர்.

# சந்தர்ப்பத்தை விவேகமாக பயன்படுத்திக்கொள்ளவும்

### ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா

(பு.கஜிந்தன்)

சந்தர்ப்பத்தை விவேகமாகப் பயன்படுத்தி இந்திய கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தியா சென்றுள்ள தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயல வேண்டுமென்று ஈ.பி.டி.பி. கட்சிச் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

அயலக தமிழர் தின விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் கடற்றொழில் அமைச்சர் உள்ளிட்ட தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமிழகம் சென்றிருக்கின்ற நிலையிலேயே முன்னாள் கடற்றொழில் அமைச்சரினால் குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

தமிழகத்தில் தற்போது இருக்கின்ற தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய கடற்றொழிலாளர்களின் விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் உட்பட்ட தலைவர்களுடன் கலந்துரையாடி எமது கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அவலங்களை எடுத்துரைக்க வேண்டும்.

அதேபோன்று, தமிழக மக்களுக்கும் உண்மைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களில் குறித்த பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு எம்மால் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக, தமிழக முதல்வர் உட்பட்ட தமிழகத் தலைவர்களைச் சந்தித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை சாத்தியமாகவில்லை.

எனவே, தற்போது கிடைத்திருக்கின்ற அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி எமது வளங்கள் அழிக்கப்படுவதையும் எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரச் சுரண்டல்களை நிறுத்துவதற்கும் முயற்சிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கசிப்பு நிலையம் முற்றுகை: ஒருவர் பொலிஸாரால் கைது

(பு.கஜிந்தன்)

ஏழாலை கிழக்கு சிவன்கோவிலடி பகுதியில் கசிப்பு, கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் போன்றவற்றுடன் 30 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் நீண்ட காலமாக சகிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஒரு இலட்சத்து 10 ஆயிரம் மில்லிலீற்றர் கோடா, 40 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரயாக்ராஜில் களைகட்டியது மஹா கும்பமேளா



## திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிய 1.50 கோடி பக்தர்கள்



உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில், மஹா கும்பமேளா என்ற மிகப் பெரும் ஆன்மிகத் திருவிழா நேற்றுமுன்தினம் (13) ஆரம்பமாகியது. முதல் நாளிலேயே, 1.50 கோடி பக்தர்கள் திரண்டு புனித நீராடினர்.

உத்தர பிரதேசத்தில் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி அமைந்துள்ளது. இங்குள்ள பிரயாக்ராஜ், கங்கை, யமுனை மற்றும் புராணங்களில் கூறப்படும் சரஸ்வதி ஆகிய நதிகள் சங்கமிக்கும் இடம். திரிவேணி சங்கமம் எனப்படும் இங்கு புனித நீராடுவது, மோட்சத்துக்கான வழியாகவும் பாவங்களை அழிப்பதாகவும் கருதப்படுகிறது.

இந்நிலையில், இங்கு மஹா கும்பமேளா எனப்படும் ஹிந்து மதத்தின் மிகப் பெரும் ஆன்மிகத் திருவிழா நேற்றுமுன்தினம் (13) ஆரம்பமாகியது. இம்மஹா கும்பமேளா எதிர்வரும் பெப்ரவரி 26 (மஹாசிவராத்திரி) வரை, 45 நாட்களுக்கு இடம்பெறவுள்ளது.

மஹா கும்பமேளாவில், உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து, 40 கோடிக்கும் அதிகமானோர் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தரகண்டின் ஹரித்வார், உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜ், மத்திய பிரதேசத்தின் உஜ்ஜைன், மஹாராஷ்டிராவின் நாசிக் ஆகிய நான்கு இடங்களில், கும்பமேளாக்கள் வழக்கமாக இடம்பெறும்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பது கும்பமேளா என்றும் ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பது அர்த்த கும்பமேளா என்றும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பது பூர்ண கும்பமேளா என்றும் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பது மஹா கும்பமேளா என்றும் அழைக்கப்படுகின்றன.

சூரியன், சந்திரன், வியாழன் மற்றும் சனி ஆகிய நான்கு கோள்களும் ஒரே நேர்கோட்டில் அமைவதுதான் மஹா கும்பமேளா என்று அழைக்கப்படுகிறது. அதாவது, 12 பூர்ண கும்பமேளாக்களின் நிறைவாக மஹா கும்பமேளா பார்க்கப்படுகிறது.

இந்தாண்டில், இந்த நான்கு கோள்களும் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளதுடன், மங்களகரமானதாக கருதப்படும் புஷ்ய நட்சத்திரத்தில் மஹா கும்பமேளா தொடங்கியுள்ளது. அதனால், இந்த ஆண்டு மஹா கும்பமேளா மேலும் சிறப்பானதாக கருதப்படுகிறது.

இந்நிலையில் கும்பமேளாவை முன்னிட்டு திரிவேணி சங்கமத்தில் 1.50 கோடி பக்தர்கள் திரண்டு புனித நீராடியுள்ளனர். இதனால் பிரயாக்ராஜ் நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது.



# பொன்னம்பலமேட்டில் ஜோதிவடிவில் ஐயப்பன்

சபரிமலையில் ஐயப்பன் கோவிலில் நேற்று (14) மகரவிளக்கு பூஜைகள் இடம்பெற்றநிலையில், பொன்னம்பலமேட்டில் ஜோதி வடிவில் காட்சி தந்த ஐயப்ப சுவாமியை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

மகர விளக்கு பூஜையையொட்டி, ஐயப்பனுக்கு அணிவிக்கப்படும் திருவாபரணங்கள் பந்தள அரண்மனையிலிருந்து ஊர்வலமாக, சபரிமலைக்கு கொண்டு செல்லப்பட்டது. பிறகு, ஐயப்ப சுவாமிக்கு திருவாபரணங்கள் அணிவிக்கப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

பொன்னம்பலமேட்டில் 3 முறை ஜோதியாக ஐயப்ப சுவாமி பக்தர்களுக்கு காட்சியளித்தார். மகர ஜோதியை கண்டு தரிசித்த பக்தர்கள் பக்தி பரவசத்தால் எழுப்பிய சரண கோஷம் விண்ணகம் அதிர்ந்தது.

மகரஜோதி தரிசனத்தை முன்னிட்டு சபரிமலையில் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் குவிந்தனர். நெரிசல் ஏற்படாமல் இருப்பதற்காக பக்தர்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன.

# விரைவில் காஸா போர்நிறுத்தம்!

## இறுதி வரைவு அறிக்கை சமர்ப்பிப்பு



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து, ஹமாஸ், இஸ்ரேல் இடையே அமைதி ஒப்பந்தம் இறுதியாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹுவும் தொலைபேசியில் முக்கிய ஆலோசனை நடத்தியுள்ள நிலையில், கட்டாரில் முகாமிட்டுள்ள இஸ்ரேல் - ஹமாஸ் குழுவினர் இடையே நேற்றுமுன்தினம்(13) முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் ஓராண்டை கடந்தும் இன்றும் இடம்பெற்று வருகிறது. காஸாமீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 46,584இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 109,731இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் செய்து வருகின்றன.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை(12) நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் காஸா விவகாரத்தில் தீர்வை நோக்கி இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாகப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் நேற்றுமுன்தினம் (13) தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்த இறுதி வரைவு அறிக்கை இஸ்ரேல், ஹமாஸ் பேச்சுவார்த்தைக் குழுவிடம் ஞாயிற்றுக்கிழமை(12) சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் இதனைத்தொடர்ந்து மேற்கண்ட இரு பிரிவு தலைவர்களும் இந்த அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கும்பட்சத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதி வடிவம் பெறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஹமாஸ் தரப்புக்கு கட்டார் தரப்பிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் இன்னொருபுறம் இஸ்ரேல் தரப்புக்கு அமெரிக்காவிடமிருந்து அழுத்தம் தரப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் ஹமாஸ் படையினர் பணயக் கைதிகளாகச் சிறைப்பிடித்து வைத்துள்ள இஸ்ரேல் மக்கள் விடுவிக்கப்பட வேண்டும், இஸ்ரேல் படைகள் காஸாவிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் ஆகிய இவ்விரு விவாதங்களும் அமைதிப் பேச்சுவார்த்தையில் மையப் புள்ளிகளாக உள்ளன.

இந்நிலையில், மத்திய கிழக்கு பகுதியான காஸாவில் கடந்த 15 மாதங்களாக நீடித்து வரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் ஒப்பந்தம் அடுத்த சில நாட்களில் இறுதி வடிவத்தை எட்டும் என்கிற நம்பிக்கையிருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ட்ரம்ப், ''நான் பதவியேற்ற 24 மணிநேரத்தில் உக்ரைன், ரஷ்யா இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வருவேன்'' என சபதம் எடுத்தார்.

அத்தோடு, ''நான் பதவியேற்று 2 வாரங்களுக்குள் பணயக்கைதிகளை விடுவிக்க ஒப்பந்தம் செய்யப்படாவிட்டால், மத்திய கிழக்கில் மோதல் வெடிக்கும்'' என ஹமாஸ் படையினருக்கு அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில் எதிர்வரும் 20ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதியா ட்ரம்ப் பதவியேற்கவுள்ளார். பதவியேற்புக்கு முன்பாகவே காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகுமென எதிர்பார்க்கப்படுவதாக அதிகாரிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், விரைவில் இஸ்ரேல்-காஸா இடையில் போர் நிறுத்தம் ஏற்படும் எனவும் ஹமாஸ் 33 பணயக்கைதிகளை விடுதலை செய்ய தயாராக இருப்பதாகவும் அமெரிக்க செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஜப்பானை உலுக்கிய 6.9 ரிச்டர் நிலநடுக்கம்

ஜப்பானில் நேற்று (14) 6.9 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில் அங்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, திபெத்தில் 5.2 ரிச்டர் அளவிலும் தஜிகிஸ்தானில் 4.1 ரிச்டர் அளவிலும் நிலநடுக்கங்கள் பதிவாயுள்ளன.

திபெத்தில் முன்னதாக 6.8 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 126இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 300இற்கும் அதிகமானோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அங்கு மீண்டும் 5.2 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் ஜப்பானில் நேற்று (14) 6.9 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. மியாஸாகி பகுதியில் பூமிக்கு 30 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்நிலநடுக்கம் உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு 9.19 மணிக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து, மியாஸாகி, க்யூஷு தீவு, கோச்சி ஆகிய பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ பொருட்சேதமோ ஏற்பட்டதாக உடனடி தகவல் இல்லை.

புவித் தகடுகள் ஒன்றுடன் ஒன்று உராயும், 'நெருப்பு வளையம்' என்றழைக்கப்படும் பகுதியில் ஜப்பான் அமைந்துள்ளதால் அங்கு நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்பட்டுவருகின்றன.

# கட்டுக்கடங்காது பற்றியெரியும் லொஸ்ஏஞ்சல்ஸ் காட்டுத் தீ

## ஒரு கோடி பேரையும் வெளியேற்ற திட்டம்



அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸில் ஏற்பட்ட காட்டுத் தீ, கட்டுக்கடங்காது தொடர்ந்து பரவி வருகிறது. காட்டுத்தீயில் சிக்கி 24பேர் உயிரிழந்த நிலையில், மேலும் பலரைக் காணவில்லை. தீ தொடர்ந்து பரவி வருவதால், அங்குள்ள ஒரு கோடி பேரையும் வெளியேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**கனடாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சூப்பர் ஸ்கூப்பர்**

இந்நிலையில் காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்காக கனடாவிலிருந்து 'சூப்பர் ஸ்கூப்பர்' என்ற அதி நவீன விமானங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன.

வட அமெரிக்க நாடான கனடாவில், சூப்பர் ஸ்கூப்பர் என்ற அதி நவீன விமானம் உள்ளது. பெரியளவிலான தீ விபத்துகள் ஏற்படும்போது, அவற்றை அணைப்பதற்காக இந்த விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆறு, ஏரி போன்ற பரந்த நீர்ப்பரப்பில் மேல் பகுதியில் பறந்து சென்று, அந்த நீரை உறிஞ்சும் திறன் இந்த விமானத்திலுள்ளது. ஆற்றிலிருந்து உறிஞ்சப்படும் நீர், விமானத்தின் கீழ் பகுதியிலுள்ள பிரமாண்ட தாங்கியில் சேமித்து வைக்கப்படும். பின், தீ எரியும் பகுதிக்கு மேல் பறந்து சென்று, அந்த தண்ணீர் பீய்ச்சி அடிக்கப்படும். இந்த விமானத்தின் வாயிலாக, 60,000 லீற்றர் தண்ணீரை உறிஞ்ச முடியும். இந்த விமானங்கள் கலிபோர்னியா மாகாணத்துக்கு வரவழைக்கப்பட்டுள்ளன.

**8ஆவது நாளாகவும் பற்றியெரியும் காட்டுத்தீ**

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த 07ஆம் திகதி ஏற்பட்ட காட்டுத் தீ, இன்று (15) 8ஆவது நாளாகவும் நேற்றும் கொழுந்துவிட்டு எரிகிறது. காட்டுத் தீயை கட்டுப்படுத்துவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால், அண்டை மாகாணங்களிலிருந்து தண்ணீர் லொறிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. ஹெலிகொப்டர்கள் வாயிலாக, கடல் நீரால் தீயை அணைக்கும் முயற்சிகளும் இடம்பெற்றுவருகின்றன.

இதற்கிடையே அப் பகுதியில் 110 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது. காற்றின் வேகம் அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகர் உள்ளிட்டவை அடங்கிய, லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி பகுதிகளில், 20,000இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் தீக்கிரையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு, தீ பரவி வரும் நிலையில், ஏற்கனவே, 1.5 இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். தீ தொடர்ந்து பரவுவதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கவுண்டிலுள்ள ஒரு கோடி பேரையும் வெளியேற்ற கவுண்டி நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7